பக்கங்கள்-16 | 28,மாசி.2021 | விலை-30.00





# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06





மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -335

# வெள்ளைக்கொடியுடன் சரணடைந்த விடுதலைப் புலிகளின் 110தளபதிகள் எங்கே?



## தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையும் இலங்கை அரசுகளின் ஏமாற்று வித்தையும்

## ஐ.நாவில் கைநழுவி போகும் தமிழர்களுக்கான தீர்வும் தமிழ் தேசிய கட்சிகளின் நிலைப்பாடும்

# வெள்ளை கொடியுடன் சரணடைந்த விடுதலை புலிகளின் 110 தளபதிகள் எங்கே?

யுத்தத்தின் இறுதி நாட்களில் சிறிலங்கா இராணுவத்திடம் சரணடைந்த மற்றும் உறவினர்களால் ஒப்படைக்கப்பட்ட நிலையில் காணாமல் ஆக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க போராளிகள் தொடர்பிலான பொறுப்புக்கூறலில் இருந்து தப்பிப்பதற்கு சிறிலங்கா இராணுவம் கடும் பிரயத்தனத்தில் ஈடுபட்டுள்ளதை உறுதிப்படுத்தும் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன. தமது பிள்ளைகள் உட்பட உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற உண்மையை அறிந்துகொள்வதற்காக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள வடக்கு கிழக்கைச் சேர்ந்த தாய்மார்களை மேலும் துன்பத்திற்குள் உள்ளாக்கும் வகையில் சிறிலங்கா இராணுவம் தங்களிடம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க போராளிகள் எவரும் சரணடையவில்லை என்று தெரிவித்திருக்கின்றனர். சிறிலங்கா 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி முடிவுக்கு கொண்டுவரப்பட்ட போரின் இறுதி நாட்களில் இராணுவத்தினரால் ஒலிபெருக்கிகள் மூலம் விடுத்த வேண்டுகோள்களை அடுத்து முல்லைத்தீவு வட்டுவாகல் பாலம் உட்பட இராணுவ முன்னரங்கு நிலைகளில் வைத்து சரணடைந்த மற்றும் தாங்கள் ஒப்படைத்த தமது பிள்ளைகள் உட்பட உறவுகளுக்கு நீதி கோரி சுமார் 900 நாட்களாக வடக்கு கிழக்கிலுள்ள வீதிகளில் தாய்மார்கள் போராடிவருகின்றனர். இதனிடையே சிறிலங்கா அரசாங்கம் அமைத்த பல்வேறு ஆணைக்குழுவிலும் முன்னிலையாகிய வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், தமது பிள்ளைகள் சிறிலங்கா இராணுவத்திடம் சரணடைந்த மற்றும் ஒப்படைக்கப்பட்ட தினம், இடம் உட்பட பல விபரங்களையும் தெரியபடுத்தியும் உள்ளனர். இவ்வாறு சரணடைந்தவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் படைக் கட்டமைப்புக்களின் உறுப்பினர்கள் அல்லது நிர்வாக பிரிவைச் சேர்ந்தவர்கள் என்பதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

இந்த நிலையில் கொழும்பிலுள்ள ஊடகமொன்றில் பணியாற்றும் தமிழ் ஊடகவியலாளர் ஒருவர் தகவல் அறியும் சட்டத்தை பயன்படுத்தி அவர்கள் தொடர்பில் விபரங்களை கேட்டிருந்த போது, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் சிறிலங்கா அரசிடமே சரணடைந்தார்களே ஒழிய இராணுவத்திடம் சரணடையவில்லை என்று பதிலளித்துள்ளனர். சிறிலங்கா இராணுவத்தின் ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அதபத்து தமிழ்மிரர் பத்திரிகையின் ஊடகவியலாளர் நிரோஷ் குமாருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே இந்தத் தகவல்களைத் தெரிவித்திருக்கின்றார். அதே வேளை சரணடைந்த விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் தொடர்பிலான விடயங்களை அணுகும் அதிகாரம்வாய்ந்த நிறுவனமான புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் அலுவலகத்தை தொடர்புகொண்டு தேவையான விபரங்களை பெற்றுக்கொள்ளுமாறும் இராணுவத்தின் ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அதபத்து, ஊடகவியலாளருக்கு ஆலோசனை வழங்கியிருக்கின்றார். ஆயிரக்கணக்கான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களை சிறிலங்கா இராணுவம் உள்ளிட்ட அரச படையினரால் கைதுசெய்யப்பட்ட நிலையில் புனர்வாழ்வு அளிக்கப்பட்டதாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் உள்ளிட்ட படைத் தளபதிகள் பலர் ஏற்கனவே உறுதிப்படுத்தியிருக்கும் நிலையிலேயே சிறிலங்கா இராணுவம் தற்போது அதற்கு முற்றிலும் மாறான கருத்தை தெரிவித்திருக்கின்றது. சிறிலங்கா இராணுவத்தின் கலால் படையின் இயந்திர பிரிவில் கடமையாற்றிய தற்போதைய ஊடகப் பேச்சாளர் வெளியிட்டுள்ள தகவல்களுக்க முற்றிலும் மாறுப்பட்ட தகவல்களை யுத்த காலத்தில் பாதுகாப்புச் செயலாளராக கடமையாற்றிய கோட்டாபய ராஜபக்ச கூறியிருந்தார். இதற்கமைய 11 ஆயிரத்து 800 தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க போராளிகள் சிறிலங்கா இராணுவத்தினரிடம் சரணடைந்திருந்ததாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ச 2013 ஆம் ஆண்டு கொழும்பில் வைத்து ஊடகவியலாளர்களுக்கு தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் சிறிலங்கா இராணுவம் தங்களிடம் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் எவரும் சரணடையவில்லை என்று கூறியிருப்பது முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைப்பதற்கு சமனான விடயம் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பிய் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் குற்றம்சாட்டியிருக்கின்றார்.

இதேவேளை மஹிந்த ராஜபக்சவின் அரசாங்கத்தில் அமைச்சராக பதவி வகித்தவரான மஹிந்தவாதி நாடாளுடமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க, 2018 ஆம் ஆண்டு கொழும்பில் நடத்தியிருந்த ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு, சிறிலங்கா இராணுவத்தினரிடம் சரணடைந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் தளபதிகள் உட்பட அப்பாவி பொது மக்களும் படுகொலை செய்யப்பட்டதாக குறிப்பிட்டிருந்தார். இதே வேளை சிறிலங்கா ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவினால் ஸ்தாபிக்கப்பட்ட OMP என்ற காணாமல்போனோர் அலுவலகமும் சிறிலங்கா இராணுவத்திடம் சரணடைந்த ஏராளமானோர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளதாக ஏற்றுக்கொண்டுள்ளது. இராணுவ தடுப்பில் இருந்த நிலையில் காணாமல் ஆக்கப்படடவர்களை கண்டுபிடிப்பது தமது அலுவலகத்தின் பிரதான கடமைகளில் ஒன்றென OMP தலைவரான ஜனாதிபதி சட்டத்தரணி சாலி பீரிஸ் அறிவித்திருந்ததுடன், சரணடைந்த மற்றும் உறவினர்களால் ஒப்படைக்கப்பட்டவர்களின் பெயர் பட்டியலை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரியிருப்பதாகவும் தெரிவித்திருந்தார். யுத்தத்தின் பின்னர் இராணுவத் தளபதியாக கடமையாற்றிய ஜெனரல் ஜகத் ஜயசூரியவினால் அவருக்குப் பின்னர் இராணுவத் தளபதியாக பதவிவகித்த ஜெனரல் கிருஷாந்த சில்வா தலைமையில் 2012 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டிருந்த ஐந்து பேர் அடங்கிய இராணுவ விசாரணைக் குழுவும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் இராணுவத்தினரின் தடுப்பில் இருந்ததை உறுதிப்படுத்தியிருந்தது. அது மாத்திரமன்றி சிறிலங்காவின் தற்போதைய எதிர்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்சவின் கடந்த ஆட்சிக் காலப்பகுதியான 2011 ஆம் ஆண்டு உருவாக்கப்படட கற்றுக்கொண்ட பாடங்களுக்கான ஜனாதிபதி ஆணைக்குழு மற்றும் 2013 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஓய்வுபெறற நீதிபதி பரணகம தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழுக்களும், சிறிலங்கா இராணுவத்திடம் சரணடைந்த தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளதாகவும், அவை தொடர்பிலான உண்மைகளும் அவர்களது உறவினர்களுக்கு அறிவிக்கப்பட வேண்டும் என்றும் பரிந்துரைத்திருந்தது

வெள்ளைக் கொடியுடன் சரணடைந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய தளபதிகளின் விபரத்தை இராணுவத்திடம் சரணடைய செல்ல முன்னரே புலிகளால் எரிக் சொல்கிம் அவர்களுக்கு அனுப்பப்பட்டதாகவும், தற்போது இந்த விபரத்தை அண்மையில் ஐநா வெளியிட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. வெளியிடப்பட்ட 110 பேரின் பெயர் விபரங்கள் வருமாறு:


வெ.இளங்குமரன் | க.வே.பாலகுமாரன் | யோ.யோகி | சி.கரிகாலன்
பரா | கி.பாப்பா | இளம்பரிதி | புதுவை இரத்தினதுரை

ஆதவா ( செயற்பாடு தெரியாது)
அகிலன் மாஸ்டர் (புலனாய்வுப் பிரிவு),
அம்பி ( செயற்பாடு தெரியாது)
அராமுதன் ( இம்ரான் பாண்டியன் படை அணியின் பிரதி தளபதி),
ஆர்யன் ( செயற்பாடு தெரியாது)
பேபி சுப்பிரமணியம் (இளங்குமரன் ) ( கல்வித் துறை பொறுப்பாளர்),
பாலச்சந்திரன் பிரபாகரன் ( பிரபாகரனின் இளைய மகன் ),
ஏ.பாலகுமாரன் ( மூத்த உறுப்பினர் )
Lt.Col.அருன்நம்பி ( இம்ரான் பாண்டியன் படை அணியின் தளபதி)
பாலகுமாரின் மகன் தீபன் ( சூரியதீபன் )
பாலதாஸ் (சிரேஷ்ட உறுப்பினர், நிதித் துறை)
பாரி (வெளியக கணக்காய்வு பொறுப்பாளர்)
பாபு 1 ( நகை விற்பனை பொறுப்பாளர், மனைவியுடன் சரணடைந்ததாக சொல்லப்படுகிறது),
பாபு - இளம்பரிதி (சேரன் வாணிப பொறுப்பாளர் )
பவன் கமில்டன் (கடாபியுடன் இருந்தவர், ஆனால் அங்கவீனமானவர்களை பராமரித்தவர்)
பாஸ்கரன் ( மணலாறு தலைமையக பொறுப்பாளர்)
பாஸ்கரன்(சொர்ணத்துடன்பணியாற்றியவர், கிளிநொச்சியில் பிறந்தவர் )
Lt.Col.சந்திரன் ( இராணுவ புலனாய்வு)
எழிலன் (திருகோணமலை அரசியல் பொறுப்பாளர் )
எழில்வாணன் மாஸ்ரர் ( பாடசாலை ஆசிரியர் )
வன பிதா.பிரான்சிஸ் ஜோசப் ( கத்தோலிக்க பாதிரியார் )
கோபி அக்கா (வீரபாண்டியன்) ( ஒரு கையை இழந்தவர், சொத்து மேற்பார்வை)
கரிகரன் ( செயற்பாடு தெரியாது)
இளம்திரையன் (மார்ஷல்) ( இராணுவ பேச்சாளர் )
இளம்பரிதி ( சின்னத்தம்பி மகாலிங்கம்) (யாழ் மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர்)
இளம்பரிதி (மகாலிங்கம் சிவாஜினி) ( இளம்பரிதியின் மனைவி)
இளம்பரிதி - மகாலிங்கம் மகிழினி ( 10 வயது )
இளம்பரிதி - மகாலிங்கம் தமிழொளி (8 வயது)
இளம்பரிதி - மகாலிங்கம் எழிலினி (3 வயது)
இளம்குமரன் (மணலாறு, கட்டளை அதிகாரி)
இளவேங்கை மாஸ்டர் ( செயற்பாடு தெரியாது)
இன்தமிழ் ( செயற்பாடு தெரியாது)
இரும்பொறை மாஸ்டர் ( சினைப்பர் அணி பொறுப்பாளர்)
இசைபிரியா ( ஊடக பிரிவு)
ஜவான் ( புலிகளின் குரல் வானொலி)
ஜெயராஜ் ( நிதிப் பிரிவு )
காந்தி ( புலனாய்வு பிரிவு, சிறைப் பொறுப்பாளர்)
கண்ணன் (அரசியல் பிரிவு, மாணவர் அமைப்பு பொறுப்பாளர்)
கங்கன்ஃ கனகன் ( லோகநாதன் அருணாசலம் ) (அரசியல் பிரிவு, பாதுகாப்பு)
கரிகாலன் ( முன்னாள் கிழக்கு மாகாண அரசியல் துறை பொறுப்பாளர்)
கருவண்ணன் ( மா வீரர் பணிமனை வாகன பொறுப்பாளர் )
கினி ( யோகியின் உதவியாளர், முரண்பாட்டு ஆய்வு நிறுவன பிரதிப் பொறுப்பாளர்)
கிருபா மாஸ்டர் ( செயற்பாடு தெரியாது)
குயிலன் ( இராணுவ புலனாய்வு)
குமரன் ( பால்ராஜின் மைத்துனர்)
குணம் ( சிரேஷ்ட படைத் தளபதி , அனேகமாக திருகோணமலையின் முன்னாள் தளபதி)
குட்டி (பாண்டியன் வாணிப பொறுப்பாளர்)
லோரன்ஸ் ( வவுனியா மாவட்ட கட்டளை அதிகாரி )
மாதவன் ( காவல் துறை பிரதி பொறுப்பாளர் )
மஜீத் ( இராணுவ புலனாய்வு- நிர்வாக அதிகாரி )
மலரவன் (நிர்வாக சேவை )
மனோஜ் ( ஏற்பாடுகள் - ரூபனின் பிரதி)
மணியரசன் ( சிரேஷ்ட இராணுவ தளபதி)
மாது ( திருகோணமலை இராணுவ பிரிவு )
மிரேஷ் ( நிதர்சனம் தொலைக்காட்சி )
மோகன் அங்கிள் (கடற்புலிகள் )
முகிலன் (இராணுவ புலனாய்வு)
முகுந்தன்ஃஐந்து ஒன்பது code ( வட போர் முனையில் தீபனின் பிரதி )
balakumaran-custody இறுதி
நடேசன் (அரசியல் துறைப் பொறுப்பாளர்)
நாகேஷ் ( ஒரு கால் இல்லை, நிர்வாக பிரிவு பொறுப்பாளர் )
நளாயினி ( பொறுப்பாளர், ஆங்கில கல்லூரி )
நளாயினி ஃநளாகினி (மாலதி படைப்பிரிவு )
நேயன் (புலனாய்வு)
நீதன் ( தலைமையக பொறுப்பாளர், சொந்த இடம் திருகோணமலை )
நிலவழகி (மருத்துவ பிரிவு மருத்துவர், இரு குழந்தைகளின் தாய்
நிஷாந்தன் (கடாபியுடன் இருந்தவர், பின்னர் அங்கவீனமானவர்களை பராமரித்தார்)
நிஷாந்தன் மாஸ்டர் (இராணுவ விநியோகம் )
பஞ்சன் புலனாய்வு (மகாதேவன் ஞானகரன்) (முக்கியஸ்தர்களில் ஒருவர் )
பரா ராதா ( நீதித் துறை பொறுப்பாளர்)
Dr.பத்மலோஜானி (கரிகாலனின் மனைவி, மருத்துவ பிரிவு)
Lt.Col.பிரபா (புலனாய்வு பிரிவு)
பூவண்ணன் (நிர்வாக பிரிவு பொறுப்பு)
பூவண்ணன் மாஸ்டர் ( செயற்பாடு தெரியாது)
பிரியன் (சுவாமிநாதர் தயாசிறி) ( நிர்வாகத்துறை பிரதி)
புலித்தேவன் (சமாதான செயலகம்)
புலிமைந்தன் (யோகியின் சாரதி)
புரச்சிகா (அம்பியுடன் கூட இருந்தவர், மேலே பார்க்க )
புரட்சி மாஸ்டர் (ஆர். பி.ஜி சினைப்பர் பிரிவு)
ரூபன் ( ஏற்பாடுகள் பொறுப்பாளர்)
ராகுலன் (யாழ்ப்பாண படைப்பிரிவு பிரதி )
ராஜா ( விளையாட்டு துறை, பாப்பாவின் பிரதி, 4 பிள்ளைகளுடன் காணவில்லை)
புதுவை இரத்தினதுரை ( கவிஞர், கலை மற்றும் கலாசார பொறுப்பாளர்)
Col.ரமேஸ் (இளங்கோ) ( காவல் துறை)
Col.ரமேஸ்(சிரேஷ்ட இராணுவ தளபதி)
ரேகா மகேந்திரராஜா ( மருத்துவ பிரிவு பொறுப்பாளர்)
ரஜித்தன் (மணலாறு மாவட்டம் )
ரூபன் ( யாழ்ப்பாண படைப்பிரிவு 3 ஆவது பொறுப்பாளர்)
S.தங்கன் (சுதா ) சோமசுந்தரம் சுதாகரன் (அரசியல் துறை பிரதி)

நெற்றிபொறியன்

11ஆம் பக்கம் பார்க்க...

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## ஐக்கிய நாடுகள் சபையில் தமிழ் மக்களுக்கான தீர்வு திட்டம் கிடைக்கப்பெறுமா?

ஐக்கிய நாடுகள் சபையை பொறுத்தவரையில் 178 நாடுகளுக்கு மேல் அதில் அங்கம் வகிக்கின்றன. ஒவ்வொரு நாடுகளிலும் இடம்பெறுகின்ற மனித உரிமை மீறல் தொடர்பான சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்திற்கமைய ஒவ்வொன்றும் கையாளப்படுகின்றன. இவ்வாறிருக்க தன்னிச்சையாக பல நாடுகள் போர்க்குற்றம் இனப்படுகொலை போன்ற விடயங்களை மேற்கொள்வதன் மூலம் சர்வதேச விசாரணைக்கு இவர்கள் முகங்கொடுக்க வேண்டிய சூழல் ஏற்படுகின்றன. இலங்கை விவகாரத்தை பொறுத்தவரையில் 4இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தார்கள் என்று கூறப்படுகின்றது.

இவ்வாறான நிலையில் மக்களை மனித கேடயங்களாக விடுதலைப்புலிகளும் இராணுவமும் பயன்படுத்தியமையால் அவ் இடிபாடுகளுக்குள் சிக்கியே மக்கள் பலர் உயிரிழந்தனர் என இராணுவம் கூறுகின்றன. ஆனாலும் முன்னாள் மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் அடிய-ார் அவர்கள் தெரிவித்த கருத்தின்படி குறித்த மக்கள் சனத்தொகைக்குள் 1 இலட்சத்து 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கொலை செய்யப்பட்டார்கள் என்று கூறியிருந்தார். சாட்சியங்களாக இருந்த அவர் தற்பொழுது சுயநலமற்ற ஒரு செயற்பாட்டாளராக இருந்துவருகிறார். முன்னாரில் உள்ள தள்ளாடி முகாமிற்கு வைபவமொன்றிற்கு சென்ற பொழுது அங்கு அவருக்கு தேனீருடன் மருந்து கலந்துகொடுக்கப்பட்டதாக கூறப்படுகிறது. எதிர்பாராது .ருப்பினும் சாட்சியங்களை அழிப்பதிலே அரசாங்கம் முனைப்புடன் செயற்பட்டு வந்தது என்பது உண்மையான விடயம். சர்வதேச நாடுகளை பொறுத்தவரையில் சுயலாப அரசியலுக்காக தமிழினத்தை பகடைக்காய்களாக்குகின்ற செயற்பாட்டை செய்துவருகிறார்கள்.

பூகோள அரசியலில் சிக்குண்டு போயுள்ள அரசாங்கம் தன்னையும் பாதுகாத்துக்கொண்டு தனது நட்புறவு நாடுகளையும் காப்பாற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. பௌத்த மதம் என்பது சிங்களவர்களுக்கு மட்டுமல்ல. சிங்களவர்களுக்கு மட்டும் என்று அவர்கள் வரையறுத்துக்கொள்வதே இனவாத பிரச்சனைகள் எழும்புவதற்கு மிக முக்கிய காரணமாகும். இவற்றை இல்லாதொழிப்பதற்கு சமய விழுமியங்களையும் ஒழுக்க நெறிகளையும் மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கான தேவைகளை சமயத் தலைவர்களுக்கு இருக்கிறது. சைவர்களும் கிறிஸ்தவர்களும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகின்ற பொழுது பௌத்த துறவிகளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடக்கூடாது என்று கூறுவது ஏற்புடையதல்ல.

ஆகவே கத்தோலிக்க பாதிரியார்களும் சைவ குருமார்களும் அரசியல்வாதிகளின் போராட்டத்தில் இருந்து தவிர்த்துக்கொள்வது தமிழ் மக்கள் முன்னெடுக்கும் போராட்டங்களுக்கு வலுச்சேர்க்கும். இன்றைய காலச்சூழ்நிலையில் சமாதானத்தை வேண்டி ஐக்கிய நாடு சபைகளிலும் சர்வதேசத்திலும் ஆர்ப்பாட்ட பேரணி இடம்பெற்றுக்கொண்டிருக்கின்ற வேளையில் அதனை குழப்பும் நோக்கில் தமிழினத்தையே ஏற்றிவிட்டு அரசாங்கம் செயற்படுகிறது. இவ்வாறான செயற்பாடுகளினால் மக்களுடைய இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது மட்டுமன்றி தமிழ் மக்கள் தமக்கான வலுவான கட்டமைப்பை உருவாக்க முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது. ஆகவே ஐ.நா சபைக்கு ஏற்றவகையில் தமிழ் மக்களின் ஆயுதப்போராட்டம் தமிழினத்தின் விடிவிற்காக போராடிய போராட்டத்தை சர்வதேசம் உணர்ந்து பயங்கரவாத தடைச்சட்டத்தை இல்லாதொழித்து தமிழ் மக்களுக்கான தீர்வை கொடுக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

# உலக வரலாற்றில் குறுஞ்சமர்

**138**

ஏதிரி அவனிடமிருந்து உன்னைவிடுவித்துச் செல்ல அனுமதிக்கடமாட்டான். இவ்வாறாயின் முழுப் படைப்பிரிவையும் அழித்துவிடுவாய் வேவின் முக்கியத்துவம் யாதெனில் முன்வைக்கப்பட்ட பணியைத் துல்லியமாக நிறைவேற்றுதலாகும். ஆரம்பிக்கப்பட்ட கண்காணிப்பை அல்லது எதிரியைத் தொடர்ந்து கவனித்தலை எப்பொழுதும் இறுதிவரை மேற்கொள். சகல தகவல்களையும் சாத்தியத்தைப் பொறுத்துத் தனிப்பட்ட முறையில் பரிசோதி. வேலை பற்றிய உண்மையான அறிக்கைமாத்திரமே படைப்பிரிவுக்குப் பலனைத் தரும்.

சுரிசுடுகலனை அல்லது ஏனைய நன்றாகத் தெரியக்கூடிய பெரிய ஆயுதத்தை வேவுக்கு எடுத்துச்செல்வது நல்லதல்ல. சட்டைப் பையினுள் கைச்சுடுகலனை வைத்திரு. உடைகளுக்குள் கையெறிகுண்டுகளை மறைத்து வைத்திரு. எவ்வாறாயினும் சுரிசுடுகலனை எடுத்துச்செல்வது அவசியமாக இருந்தால் அதனைக் கையில் வைத்திருப்பதுடன் ஒவ்வொரு வினாடியும் சமருக்குத் தயாராக இரு.

பாதையில் இனந்தெரியாத நபரொருவரைச் சந்திக்க நேர்ந்தால் மிக அவதானமாக இரு. அவன் உன்னை எதிரிக்குக் காட்டிக்கொடுக்கக்கூடும். அவனை அவதானமாக விசாரி. ஊன்னைப் பொறுத்தவரையில் மிக முக்கியமான கேள்விகளைப் படிப்படியாகக் கையோடு கேள். அவனிடமிருந்து விடைபெற்றுச் செல்லும்போது பிரதான பாதைக்கு வேறு திசையில் செல் உன்னை யாரும் பின்தொடரவில்லை என்பதை உறுதிப்படுத்தியபின் மாத்திரமே உனது நகர்வுத் திசைக்குச் செல்.

பிரதேச மக்களிடத்தில் கெரில்லாக்களுக்கு உதவுகின்ற விசுவாசமுள்ள நண்பர்கள் இருப்பார்களானால் வேவுக்காகப் பிரதேச மக்களின் உதவியைப் பயன்படுத்து குறிப்பாக மக்கள் வாழ்விடத்தில் இருக்கின்ற எதிரியைப் பற்றிய தகவல்களைப் பிரதேசவாசி இலகுவாகப் பெற்றுக்கொள்வான்.

எதிரியுடன் சமரிட வேண்டிய நிலையேற்படுமானால் அவனை அழிக்க எப்பொழுதும் முயற்சிசெய். பாசிஸ்டுக்களின் உடலைப் பரிசோதித்துத் தேடு. அவனிடமுள்ள சகல ஆவணங்களையும் தனிப்பட்ட குறிப்புக்களையும் எடுத்துக்கொள். அவனது ஆயுதத்தை உன்னுடன் எடுத்துச்செல்ல முடியவில்லையாயின் அதனை எங்காவது மறைவான இடத்தில் ஒளித்துவை. முட்டுப்பட்ட இடத்தைச் சுற்றிவரப் பார்வையிடுகின்றனவா எனப்பார். ஏதிரியின் உடலங்களை மறைத்துவிடு. சாத்தியமான வகையில் சமர் நடைபெற்றதற்கான தடயங்களை அழித்துவிடு. இதனால் தமது சிப்பாயைத் தேடுவதிலும் உன்னைப் பின்தொடர்வதிலும் பாசிஸ்டுக்களுக்குச் சிரமத்தை ஏற்படுத்துகின்றாய். ஏதிரியை உன்னால் அழிக்க முடியாது போனால் அவனிடமிருந்து தப்பித்துச் செல்ல முயற்சிசெய். நேராகப் படைப்பிரிவை நோக்கிப் பின்வாங்கிச் செல்லாதே. துந்திரத்தால் உனது உண்மையான பின்வாங்கல் பாதையை மறைத்து எதிரியைத் திணறடி. ஏதிரியின் பெரிய படைபலத்துடனான மோதலைத் தவிர். ஆவர்கள் நெருங்கி வருவதை அவதானித்ததும் ஒளிந்துகொள்வதுடன் நீ அங்கிருப்பதை எவ்வகையிலும் வெளிக்காட்டாதே. ஏதிரி கடந்து சென்றதும் அதனைப் படைப்பிரிவிற்குத் தெரிவி. ஆதன் பின்னர் உன்னிடம் தரப்பட்ட பணியை நிறைவேற்று.

வேவின் போது இனந்தெரியாத ஆட்களைக் கொண்ட குழுவுடன் எதிர்பாராத வகையில் முட்டுப்படலாம். தன்னிலை இழக்காமல் தீர்க்கமாகச் செயற்படு. முதலில் உனது பாதுகாப்பை உறுதிப்படுத்து. ஆயுதத்தைக் கீழே போட அல்லது கைகளை மேலே உயர்த்த அவர்களுக்குக் கட்டளையிடு. ஆனால் நீ ஆயுதத்தைத் தயார் நிலையில் பிடித்திரு. குறிப்பாகக் கையெறிகுண்டுகளைப் பிடித்திரு. அவர்களால் உனக்கு எதுவித ஆபத்தில்லையென்பதை உறுதிப்படுத்தாமல், அவர்களுக்குக் கிட்டவாகச் செல்லாதே. ஏதிரி இரண்டகம் செய்யப்கூடியவன் தந்திரமானவன். அவன் எந்தவிதமான ஆடைகளையும் அணிந்திருப்பான் ஏன் செஞ்சேனையின் சீருடையயுங்கூட அணிந்திருப்பான்.

எவராலும் கண்டு கொள்ளாதவாறு நகர். ஊனக்குப் பின்னால் தயடங்களைவ விட்டுவிடாதே. ஈரமான தரையைக் கொண்ட இடங்களில் காலடிகளை வைக்காதே. இங்கே உனது கால் தடங்கள் நன்றாகப் பதியப்பட்டு விடுகின்றன. இப் பகுதியின் விளிம்புப் பகுதிகளால் நகர். ஆதி காலை வேளைகளில் பனிபடர்ந்த புமல்களில் கால் தடங்கள் பதியப்படுகின்றதென்பதை நினைவிற்கொள். அடர்த்தியான வளைந்த புற்களுக்குள்ளால் நகர்வதையும் தவிர். குாட்டிடையேயுள்ள வெளிகளைக் கடந்து செல்லாதே. முாறாக காட்டின் ஓரத்தால் நகர முயற்சிசெய்.

கெரில்லாக்களைத் தேடுவதற்காகப் பாசிஸ்டுக்கள் பணிக்கமர்த்தப்பட்ட நாய்களைப் பயன்படுத்துகின்றார்கள் என்பதனையும் நினைவிற்கொள். உனக்குப் பின்னால் குறைந்தளவு தடயங்கள் இருப்பதே சாத்தியமாகும் வகையில் சகல நடவடிக்கைகளையும் கைக்கொள்.

**தொடர்வான்...**

**நெற்றிப்பொறியன்**



# ஐ.நா மனித உரிமை கூட்டத்தொடரும் தமிழர்களின் கானல்நீரான தீர்வுகளும்

தமிழர்களின் தன்னாட்சி உரிமைக்கான போராட்டம் 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் மண்ணில் உலக வல்லரசுகளின் உதவியோடு அழித்தொழிக்கப்பட்டது. இலட்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டும் பல்லாயிரம் பேர் அங்கவீனர்களாயும் இன்னும் ஆயிரக்கணக்கானோர் காணாமல் போயும் மிகப்பெரும் மனிதப் பேரவலம் அரங்கேறியது. போர் இடம்பெறும் பிரதேசங்களில் வெள்ளைக்கொடியுடன் சரணடையும் போராளிகளாகட்டும் மக்களாகட்டும் அல்லது படையினராகட்டும் அவர்களை மனிதாபிமான அடிப்படையுடன் நடாத்த வேண்டும் என்பது மனித உரிமை செயலகத்தாலும் (I.C.R.C) சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் வரையும் குறிப்பிடும் நிலையில் சரணடைந்த பொதுமக்கள் போராளிகள் என பலர் காணாமல் ஆக்கப்பட்டதுடன் பல போராளிகள் நிர்வானம் ஆக்கப்பட்டு அவர்களது தலையில் சுட்டுக்கொல்லும் காட்சிகள் பல வெளியாகின. இதனைவிட பல பெண் போராளிகள் பாலியல் பலாத்காரம் பண்ணப்பட்டு மிகக்கோரமாக படுகொலை செய்யப்பட்டனர். சரணடைந்த பல போராளிகள் கடும் சித்திரவதைகளின் பின்னர் குறிப்பிடத்தக்களவு போராளிகள் குடும்பங்களுடன் .இணைக்கப்பட்டனர். இன்னும் பல நூறு பேர் அரசியல் கைதிகளாக சிறையில் வாடுகின்றனர். பெற்றோரால் அரச படையினரிடம் கையளிக்கப்பட்ட தமது பிள்ளைகள் .இதுவரை தமது கையில் திரும்பி கிடைக்காமல் தேடியலையும் பல தாய்மார்கள் தேடுதல் படலத்தின் முடிவு இல்லாமல் அவர்கள் மரணமடைந்து செல்லும் நிகழ்வுகள் தொடர்ந்த வண்ணம் உள்ள நிலையில் ஐ.நா மனித உரிமை பேரவையின் 46 வது கூட்டத்தொடர் பெப்ரவரி 22 ஆம் திகதி தொடக்கம் இடம்பெற்று வரும் நிலையில் இம்முறை உலகை புரட்டிப்போடும் கொரோனா வைரஸ் காரணமாக இம்முறை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் தான் கூட்டத்தொடரில் பங்கேற்க அனுமதியளிப்பட்டுள்ளது. ஏனையோர் காணொளி மூலம் இக் கூட்டத்தொடரில் பங்கேற்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழர்கள் தங்களின் சுயாட்சி அரசியல் தீர்வுக்கு கடந்த காலங்களில் வந்த ஐ.நா கூட்டத்தொடரைப் போல இல்லாமல் இந்த தொடரில் ஏதாவது நல்ல தீர்வு தமக்கு சாதகமாக அமையும் என எதிர்பார்த்த நிலையில் இப்பத்தி எழுதும் வரை தமிழ் மக்கள் தரப்புக்கு சார்பான எந்தவொரு விடயமும் இல்லாமல் ஒரு கொதி நிலையற்ற தன்மையே காணப்படுகின்றது. இம்முறை ஐ.நா மனித உரிமைத்தொடர் இடம்பெறுவதற்கு முன்னர் இத்தொடரில் ஏற்படப்போகும் தமிழர் தரப்புக்கான சாதக பாதக தன்மைகள் பற்றி ஆராய்ந்த பொழுது இத்தொடர் மிகவும் ஓர் இக்கட்டான சூழ்நிலையில் இடம்பெறுகின்றது. அதாவது 2019 ஆம் ஆண்டு டிசம்பர் பகுதியில் சீனாவில் உருவாக கொரோனா வைரஸானது இன்று முழு உலகையும் புரட்டிப்போட்ட பெரும் மனித பேரவலம் இடம்பெற்றதுடன் உலக வல்லரசு முதல் கொண்டு சிறிய நாடுகள் வரை உயிர் சேதம் நோய் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை அத்துடன் பொருளாதார ரீதியான பாரிய பின்னடைவு என மிகப்பெரும் அவலத்தை உலகம் சந்தித்து வருகின்றது. உலக சுகாதாரப் பிரிவு இந்நோயினை கட்டுப்படுத்த பெரும் போராட்டத்தை எதிர்நோக்கி வருகின்றது. இவ்வாறான சூழ்நிலையில் தான் ஐ.நா மனித உரிமை கூட்டத்தொடர் இடம்பெறுகின்றது. ஆகவே இத்தொடரில் கொரோனா நோய்த் தாக்கமும் அதனுடன் இடம்பெறும் உலக பொருளாதார நெருக்கடி தொடர்பான விடயங்கள் இங்கு முக்கியத்துவம் பெறும் அத்துடன் 2015 ஆம் ஆண்டு இலங்கையில் நல்லாட்சி அரசினால் முன்மொழியப்பட்ட சில விடயங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்கள் தொடர்பில் கொடுக்கப்பட்ட கால அவகாசங்கள் அந்த கால அவகாசங்களில் இடம்பெற்ற செயற்பாடுகள் என்பவற்றை ஆராய்ந்து அதில் இலங்கை அரசால் சமர்ப்பிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டதா என பார்ப்பதற்குள் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு கோட்டபாய ராஜபக்ச அவர்கள் ஆட்சிபீடம் ஏறியவுடன் 2015 ஆம் ஆண்டில் நல்லாட்சி அரசால் சமர்ப்பிக்கப்பட்ட பொறுப்புக்கூறல் விடயத்தில் இருந்து விலகுவதாக ஐ.நா மனித உரிமை அமையத்திடம் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட நிலையில் இலங்கையின் தற்போதைய அரசின் நிலைப்பாடு ஓரளவு ஐ.நா மனித உரிமை பேரவைக்கு விளங்கும்.

இலங்கையில் இடம்பெற்ற திட்டமிட்ட இனவழிப்பு படுகொலைகள் யுத்தத்தின் இடம்பெறும் பொழுது அதில் இரு பகுதிகளிலும் சேதம் ஏற்படும் என்ற கோணத்திலும் யுத்தகாலத்தில் இடம் பெற்றமையில் இது தவிர்க்க முடியாத விடயமாகவும் அரசும் அரசுக்கு மூண்டு கொடுக்கும் வல்லாதிக்க சக்திகளும் ஐ.நா மனித உரிமை பேரவையில் நியாயம் கற்பிக்க முற்படுகின்றன. உண்மையில் யுத்தத்தில் இரு பகுதிகளுக்கும் அகப்படும் மக்களுக்கு இழப்புக்கள் ஏற்படுவது தவிர்க்கமுடியாத விடயமாக பார்க்கப்பட்டாலும் யுத்தம் முடிவுறுகின்ற நேரம் வெள்ளைக் கொடியுடன் சரணடைந்த போராளிகள் மற்றும் பொது மக்கள் எங்கே? அடுத்து யுத்தம் முடிவுற்றதும் அரச படைத்தளபதிகளிடம் கையளிக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது நலன்புரி முகாம்களில் வைத்து பிடித்து செல்லப்பட்டவர்கள் எங்கே யுத்தத்தில் பாவிக்க கூடாது என உலக மனித உரிமையத்தாலும் போரபத்து ஆயுதப் பாவனையை தடுக்கும் அமைப்பால் தடைசெய்யப்பட்ட நிலையில் கிளசார் குண்டுகளை வீசி அப்பாவி மக்களை கொன்றதற்கு முடிவு என்ன யுத்த விதிகளின் படி சரணடைந்த போராளிகள் பெண் போராளிகள் என பலர் விடுதலை செய்யப்பட்ட பொழுதிலும் இன்னும் பலர் சிறைகளில் வாடுகின்றார்கள்.

அதற்கான முடிவு என்ன? இதனை விட யுத்தத்தில் சம்மந்தம் இல்லாமல் பொய்க் குற்றச்சாட்டின் பெயரிலும் தமிழர்கள் என்ற ரீதியிலும் கைது செய்யப்பட்டு சிறைகளில் பல ஆண்டுகளாக வாடும் அரசியல் கைதிகளின் விடுதலைக்கான முடிவு என்ன யுத்தம் முடிவுற்றது தமிழர்களின் காணிகள் விடுவிக்கப்படாமல் இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் அடாத்தான செயலுக்கு முடிவு என்ன? தமிழர்களின் பூர்விக இடங்களில் தொல்பொருள் ஆராய்ச்சி என கூறி அவர்களின் முதாதையர்கள் வாழ்ந்த நிலங்களை அபகரிக்கும் கைங்காரியத்தை தடுக்க என்ன வழி? தமிழ் மக்களின் '.இறந்த தமது உறவுகளை நினைவு கூறக்கூடிய ஆகக்குறைந்த அவர்களின் உரிமையை தடுக்கும் கீழ்தரமான கொடுங்கோல் ஆட்சியின் தன்மை தான் என்ன? ஆகவே தமிழர்கள் ஐ.நாவில் கேட்பது இதைத்தான் யுத்தத்தின் பின்னர் இடம்பெற்ற இடம்பெற்றுக்கொண்டு இருக்கின்ற இன நல்லிணக்கம் ஒரேநாடு சட்டம் எனக்கூறி இனவழிப்பையும் இன அடக்கு முறையையும் மேற்கொள்ளும் அரசிடமிருந்து அதற்கான தீர்வை தான் கேட்கின்றார்கள். யுத்தம் முடிவடைந்து சுமார் 11 வருடங்கள் கடந்த நிலையிலும் இதுவரை எதுவித தீர்வும் கிடைக்காமல் தமிழினம் ஏட்டு சுரைக்காய் கறிக்கு உதவாது என்னும் பழமொழிக்கேற்ற ஓர் வெறுப்பு நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.

இலங்கையில் இடம்பெற்ற படுகொலைகள் போல உலகில் பல இடங்களில் இடம்பெற்றுள்ள நிலையில் அதற்கான தீர்வுகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கணிசமான அளவில் கிடைத்துள்ளது. கியூபா நாட்டில் இடம்பெற்ற படுகொலைகளுக்கு கியூபா நாட்டின் ஜனாதிபதி கேணல் கடாபி அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. ஈராக் நாட்டில் தனக்கெதிரான செயற்பட்ட ஒரு பகுதி முஸ்லிம்களை படு



பயங்கரமாக கொன்றொளித்த அந்நாட்டின் முன்னாள் ஜனாதிபதி சதாம் உசைன் அவர்கள் தூக்கிலிடப்பட்டார். மியன்மாரில் இடம்பெற்ற மனிதப் படுகொலைகளுக்கு நீதி வழங்கப்பட்டது ஆனால் ஐ.நா பொதுச்செயலாளரின் பொறுப்புகூறல் நிபுணர் குழுவின் 2011 மார்ச் மாத அறிக்கையின் படி ஆயுதப் போராட்டத்தின் இறுதி கட்டத்தில் போர்க்குற்றங்கள் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் அத்துடன் இறுதி 6 மாத காலத்துக்குள் சுமார் 40 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்றும் மே 2009 இல் முடிவடைந்த போரின் இறுதி ஆறுமாத காலங்களில் எழுபதாயிரம் பேருக்கு மேற்பட்ட தமிழர்கள் தொடர்பில் எந்த தகவலும் கிடைக்கவில்லை என்றும் சர்வதேச உண்மை மற்றும் நீதித்திட்டம் 2017 பெப்ரவரி மாதம் இலங்கை இராணுவம் தமிழ் பெண்ணை பாலியல் அடிமைகளாக தடுத்து வைக்கப்பட்டிருந்தமை தொடர்பிலான விபரங்களை ஐ.நா விடம் ஒப்படைத்துள்ளது. அத்துடன் 2013 ஏப்ரல் அன்று இங்கிலாந்தின் வெளியுறவு மற்றும் பொது நலவாய அலுவலக அறிக்கையின்படி இலங்கையில் இடம்பெற்ற போரினால் 90,000 க்கும் மேற்பட்ட தமிழ் பெண்கள் விதவைகளாயுள்ளனர். போன்ற அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் இலங்கை அரசாங்கங்கள் யூ.என்.எச்.சி. ஆர் தீர்மானங்கள் எதையும் செயல்படுத்த தவறிவிட்டன. முன்னைய அரசாங்கம் இணைந்து வழங்கிய தீர்மானத்தை நடைமுறைப்படுத்த தவறியது மட்டுமல்லாமல் ஜனாதிபதி பிரதமர் உட்பட பலர் திட்டவட்டமாக யூ.என்.எச் சிஆர் இன் தீர்மானத்தை செயற்படுத்த மாட்டோம் எனக் கூறியுள்ளனர்.

இதனை விட ஒருபடி மேலே சென்று தற்போதைய அரசாங்கம் 30/1, 34/1 மற்றும் 40/1 தீர்மானங்களின் இணை அனுசரணையில் இருந்து விலகுகின்றோம் என அறிவித்ததுடன் போர்க்குற்றம் செய்வதாக கூறப்படும் இராணுவ அதிகாரிகளுக்கு நான்கு நட்சத்திர ஜெனரலாக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு இந்த அரசின் செயற்பாடுகளுக்கு ஆதரவும் வழங்கி ஐ.நா மனித உரிமை பேரவையை மதிக்காமலும் ICRC இன் அறிக்கைகளை தூக்கி எறிந்து அரசை காப்பாற்ற உலகின் மிகப்பெரும் ஜனநாயக நாடென்றும் தமிழர்களுக்கு எப்பொழுதும் பக்க பலமாக நிற்பதாக கூறிக்கொண்டு தனது பிராந்திய சுயநலனுக்காக வடகிழக்கு தமிழர்களை பாவிக்கும் இந்தியா உட்பட பல வல்லரசு நாடுகள் அனைத்தும் பகிரங்கமாகவும் திரைமறைவிலும் செயற்பட்டுக்கொண்டு இருக்கின்றன. இந்நிலையில் தமிழர்களின் கொடுமைகளுக்கான தீர்வானது வெறும் கானல் நீராய் தான் உள்ளது. தமிழர்களின் அழிவுக்கான தீர்வுதான் என்ன அது எப்பொழுது சாத்தியமாகும். புலம்பெயர் தமிழர்களின் செயற்பாடுகள் இம்முறையும் கையேறு நிலைக்கு சென்றுள்ளது. உலக நாடுகள் அனைத்திலும் வாழும் புலம்பெயர் தமிழர்கள் சிலநாடுகளில் அரசின் உயர்மட்ட பதவிகளுக்கு சென்றுள்ளனர். சில நாடுகளின் தேர்தல்களில் தமிழர்களின் வாக்குகள் கூட செல்வாக்கு செலுத்தும் நிலை காணப்படுகின்றது. இருந்த பொழுதிலும் ஏன் இந்த சறுக்கல் ஏன் இந்த பின்னடைவு உண்மையில் தமிழினத்தின் ஒற்றுமைத்தன்மை மற்றும் தியாக உணர்வு தேசியம் சுயநிர்ணய உரிமை என்பவற்றில் இருந்த உறுதிப்பாடு மெதுவாக கைவிட்டு செல்லும் நிலையில் உள்ளது சுயநலமும் தாங்கள் சார் நாட்டில் நிம்மதியாக வாழ்வதற்கும் தங்கள் இருப்பை புலம்பெயர் நாட்டில் உறுதியாக்குவதற்கும் ஈழத்தில் இடம்பெற்ற ஆயுதப்போராட்டத்தை பயன்படுத்திவிட்டு போர்க்காலங்களில் பல அற்புத தியாகங்களையும் நிதிகளையும் அள்ளி வழங்கிய அற்புதமான புலம்பெயர் மக்களின் தியாகங்களிலும் ஈழத்தில் இடம்பெற்ற போரில் உயிர்நீத்த வீரமறவர்களின் உயிர் தியாகங்களிலும் பொது மக்களின் உயிர்தியாகங்களிலும் சில புலம்பெயர் தமிழர்கள் குளிர்காய்கின்றார்கள். அது வெறுமனே புலம்பெயர் தேசத்தில் மட்டுமன்றி எமது வடகிழக்கு பிரதேசங்களிலும் வாழ்கின்றார்கள். அவர்களில் தமிழ் தேசியம்பேசும்சிலசுயநலஅரசியல்வாதிகளும் உள்ளனர்.

ஆகவே இவற்றையேல்லாம் களைந்தெறிந்து விட்டு ஓர் இலக்குடன் எமது மக்களுக்கு இடம்பெற்ற அநீதிகளை தீர்வை பெற முயற்சிக்க வேண்டும் இதில் குறிப்பாக ஐ.நா மனித உரிமை பேரவை கூட்டங்களில் புலம்பெயர் தேசத்து உறவுகள் இன்னும் காத்திரமான செயற்பாட்டில் ஈடுபட வேண்டும். தங்களது சுயநல விடயங்கள் ஒதுக்கி எமது மக்களின் இன்றைய நிலையை கருத்தில் கொண்டும் எதிர்கால சந்ததியினரின் நிலையை கருத்தில் கொண்டும் ஓர் திடமான முடிவுக்கு வரவேண்டிய காலமிது. இனியும் தூங்கினால் அத்தூக்கம் நிரந்தர தூக்கமாக மாறிவிடும் உலக புலம்பெயர் தமிழ் உறவுகளே ஈழத்தில் உயிர்நீத்த எமது உறவுகளின் தியாகங்களில் குளிர்காயும்தமிழ்இன அரசியல்தலைமைகளே எமது தமிழினத்தின் தியாகங்களை வைத்து தமிழ் நாட்டில் அரசியல் செய்யும் ஈழ உணர்வாளர்கள் என்று சொல்லிக்கொள்ளும் சில அரசியல் தலைமைகளே இனியாவது விழித்துக்கொள்ளுங்கள். தாயகம், சுயநிர்ணயம், தேசியம் தான் கிடைக்கவில்லை இறுதி யுத்தத்தில் இடம்பெற்ற கொலைகளுக்கான நீதியையும் காணாமல் போன உறவுகளுக்கான முடிவையும் எமது இனத்தின் இருப்பை தக்க வைக்கவும் எமது நிலத்தை பாதுகாக்கவும் வரும் ஐ.நா மனித உரிமை கூட்டத்தொடரின் எமக்கான சரியான தீர்வை பெற முயலுங்கள் இல்லாவிடின் இதுவே எமது இறுதி இருப்பாக முடியும். இதுவே காலம் கடந்து சென்று விட்ட ஓர் விடயமாக உலகம் பார்க்க தொடங்கிவிட்டது. அறியகஞ்சிபழுங்கஞ்சியான விடயமாக மாறுவதற்குள் எமது அழிவிற்கான தீர்வை பெற முன்வாருங்கள் **தமிழர்களின் கண்ணீருக்கான மருந்தை தேடுங்கள்.**

**தாயகத்தான்**

# ஐ.நா வில் கைநழுவிப் போகும் தமிழர்களுக்கான தீர்வும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் நிலைப்பாடும்

உலகில் மொழியாலும் கலாச்சார விழுமியங்களாலும் பண்டையகால ஆய்வுகளில் மிகவும் தொன்மையான இனமான திராவிட தமிழினம் ஆண்ட பரம்பரையாக யொழித்த இனம் இன்றைய விஞ்ஞான உலகின் கண்டுபிடிப்புகளின் தொடக்க புள்ளியே பண்டைய தமிழர்களின் வாழ்க்கை முறையில் இருந்து வந்தவையே என தற்கால தொல்லியல் ஆய்வுகள் கூறுகின்றன. இவ்வாறு மொழியாலும் கலாச்சாரத்தாலும் பண்பாட்டு விழுமியங்களாலும் கலைகளாலும் மிக உன்னதமானதும் ஆண்ட பரம்பரையாக இருந்த ஓர் இனம் இன்று கேட்பதற்கு நாதியற்று உலகெங்கிலும் அநாதரவா-கவும் தனது சொந்த மண்ணில் அடிமையா-கவும் உலகிலேயே தமிழன் என்ற இனத்தின் அடையாளம் கூட தெரியாமல் மழுங்கடிக்கப்பட்டு இருந்த நிலையில் அடக்குமுறைகள் கல்வித் தரப்படுத்தல்கள் மொழித்திணிப்புக்கள் மத கலாச்சாரங்கள் அழிக்கப்படுதல் என தொடரான சிங்கள ஏகாதிபத்திய பௌத்த பேரினவாத சிந்தனை கொண்ட சிங்களத் தலைமை களாலும் மேற்குறிப்பிட்டு சொல்லப்பட்ட செயற்பாடுகளால் தமிழினம் ஆயுதத்தால் பதில் சொல்ல வேண்டி தள்ளப்பட்டது. 1970 களின் பின்னர் தமிழர்கள் தங்களது ஓர் இழி நிலையை கண்டு வெகுண்டெழுந்தனர். கல்வி தரப்படுத்தலுக்கு எதிராக மாணவ சமுதாயம் வீதிக்கு இறங்கியது. அகிம்சை வழியில் இறங்கிய மாணவ சமுதாயத்தை இரும்புக்கரம் கொண்டு அடக்க முற்பட்ட பேரினவாத அரசுகளால் அகிம்சை வழியில் பேசி பயனில்லை என முடிவெடுத்த மாணவ சமுதாயம் ஆயுதவழிப் போராட்டத்துக்கு மாறியது. 1975 களின் பின்னர் ஆயுதப் போராட்டம் ஆரம்பமாகி பல ஆயுத போராட்ட அமைப்புகள் தமிழர்களின் இருப்பை தக்கவைக்கவும் தமிழர்களுக்கான தாயகம் சுதந்திரம் தேசியம் என்பன உள்ளடக்கலான தமிழீழம் நோக்கிய தமது ஆயுதப் பயணத்தை தொடங்கினர். காலவோட்டத்தில் சில ஆயுத அமைப்புக்கள இந்திய ஏகாதிபத்திய வல்லரசின் பிடியில் சிக்கி அதன் பிராந்திய நலன் சார் செயற்திட்டத்துக்கு முண்டுகொடுக்க யாருக்காக போராட புறப்பட்டோமோ அவர்களுக்கு எதிராகவே தமது ஆயுதத்தை திருப்பினர். இதில் விடுதலைப்புலிகள் அமைப்பு மட்டும் தான் தமிழ் இனத்தின் தாயகம் நோக்கிய பயணத்தை தனது இறுதி மூச்சு வரை செயல்படுத்தியது. விடுதலைப்புலிகளின் ஆயுதப்போராட்டம் தான் தமிழன் என்ற ஓர் இனம் இருப்பதை உலகிற்கு பறைசாற்றியது.

தமிழர்களுக்கு என்ற ஓர் நாடு தேவை என்பதையும் அவர்களுக்கு அரசியல் ரீதியான தீர்வு தேவை என்பதையும் தமிழர்கள் அடக்கப்படுவதையும் உலகிற்கு புரியவைத்தது. அந்த ஆயுதப்போராட்டமே இன்று ஐ.நா மனித உரிமை பேரவையில் இது பற்றி பேசுவதற்கு கூட அந்த ஆயுதப் போராட்டமே காரணம் இன்று இலங்கை அரசுகளாலும் உலகின் ஏகாதிபத்திய வல்லரசுகளாலும் பயங்கரவாதிகள் தீவிரவாதிகள் என முத்திரை குத்தப்பட்ட விடுதலைப்புலிகளைப் போல உலகில் போராடும் எந்தவொரு ஆயுத போராட்ட அமைப்புகளும் உலக நாடுகளின் மத்தியஸ்துடன் அதிகளவான பேச்சுவார்த்தைகளுக்கு கலந்து கொண்டதில்லை. போராட்ட இயக்க அமைப்பொன்று தனது மக்களுக்கான சிவில் பொருளாதார விளையாட்டு கல்வி அறிவியல் பொருண்மிய ஊடகங்கள் வங்கிச் சேவைகள் இராணுவக் கட்டமைப்பு கடல்படை கட்டமைப்பு விமானப்படை கட்டமைப்பு என எந்தவொரு விடுதலைக்கோரி உலகில் போராடிய ஆயுத அமைப்புகளும் செயற்படுத்திய வரலாறு இல்லை. தமிழினத்தின் உரிமைக்கான போராட்டத்தை நடாத்திய விடுதலைப்புலிகள் அமைப்பு ஒன்றே .இவ்வாறான கட்டமைப்பை உருவாக்கி செயற்படுத்தி காட்டியது. சரி பிழைக்கு அப்பால் சிங்கள மக்களாலும் அவர்களது போராட்டமும் அவர்களது கண்ணியமான செயற்பாடுகளையும் ஏற்றுக்கொள்ளப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கதுடன் சிங்கள இராணுவத்தின் தற்பொழுது உள்ள நட்சத்திர படைத் தளபதிகள் கூட விடுதலைப்புலிகளின் தலைவரை பற்றிய கூற்றுக்களில் அவர்களது நேர்த்தியான செயற்பாடுகள் புடமிட்டு காட்டப்படுகின்றது. இன்று கொரோனா வைரசால் உயிரிழக்கும் முஸ்லிம் மக்களின் ஜனாசாக்களை அவர்களது மத அடிப்படையிம் அடக்கம் செய்வதற்கு தடைவிதித்து அதற்கு எதிராக தகனம் செய்யப்படுகின்றது. பேரினவாத சிந்தனை கொண்ட இவ் அரசானது முஸ்லிம் மக்களின் சமய அனுஸ்டானர்களை மிதித்து அவர்களது இறுதிக் கடமையை கூட செய்ய விடாமல் கொரோனா வைரஸ் என்னும் நோய் தொற்றை காட்டி அவர்களது ஜனாசாக்களை தகனம் செய்கின்றது. மாறி மாறி வரும் அரசுகளுக்கு தமது வியாபார மூளை அரசியலை மட்டும் பயன்படுத்தி முண்டு கொடுத்து தங்களது சுயலாப அரசியலை செய்யும் முஸ்லிம் தலைமைகள் இன்று தமது மக்களுக்கும் தமக்கும் உள்ளடங்களான தமது மதத்தின் சட்ட பிரமானங்களைக் கூட நிறைவேற்ற முடியாமல் கையேறு நிலையில் உள்ளனர். அன்று உலகில் முஸ்லிம் மக்களுக்கு குரல் கொடுக்க கூடிய சுமார் 48 இஸ்லாமிய நாடுகள் இருந்தும் இங்குள்ள இஸ்லாமிய இனத்துக்கு ஓர் தீர்வை பெற முடியாமல் ஓர் இழி நிலையில் உள்ளனர். உலகில் பொருளாதார ரீதியிலும் எண்ணெய் வழ ரீதியிலும் மிகவும் பலம் வாய்ந்த நாடுகளாக உள்ள சவுதி அரேபியா, கட்டார், குவைத், ஈரான், பாகிஸ்தான் ஆகிய நாடுகள் இருந்தும் இலங்கை அரசை ஒரு வழிக்கு கொண்டு வர முடியாத கையேறு நிலையில் தான் இஸ்லாமிய இனம் உள்ளது. இதனைவிட மிகவும் வேதனையான விடயம் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள நிலையில் அவரது இரண்டு நாள் பயணத்தில் முஸ்லிம் அரசியல் தலைமைகளை சந்திப்பதற்கு அனுமதிகோரியபொழுதிலும்இப்பத்திஎழுதும் வரை அதற்கு முடிவு கிடைக்கவில்லை. முதலில் சொற்ப நேரம் ஒதுக்கி தருவதாக பாகிஸ்தானின் இலங்கைக்கான தூதுவர் வாக்குறுதி அளித்த நிலையில் தற்பொழுது மேல்மட்ட அழுத்தங்களால் அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இஸ்லாமிய இனத்துக்கு குரல் கொடுக்க 48 இஸ்லாமிய நாடுகள் உள்ளன என வாய்வீச்சில் வெடி கொழுத்தும் முஸ்லிம் தலைமைகளே ஒன்றை புரிந்து கொள்ளுங்கள். உங்களுக்கு ஆதரவாக 48 நாடுகள் இருக்கின்றன. ஆனால் தமிழ் இனத்துக்கென்று குரல் கொடுக்க நாடுகள் இல்லாத பொழுதிலும் தமிழர்களின் வீரமும் அவர்களின் தன்மானப் போராட்டமும் இன்று உலகை அவர்கள் பக்கம் திரும்பிய வரலாறை நீங்கள் மறக்க வேண்டாம். இனியாவது இப் பேரினவாத சிந்தனை கொண்ட அரசை உங்கள் பக்கம் திருப்பி உங்களது நியாயபூர்வமான அரசியல் தேவைகளை பெற தமிழினத்துடன் இணைந்து சுயநல அரசியலை துறந்து செயல்பட வேண்டிய காலம் வந்துவிட்டது. தமிழர்களின் ஆயுதப் போராட்டம் 2009 இல் மௌனிக்கப்பட்டதன் பின்னர் அவர்களின் அவல நிலை மீண்டும் தொடக்க புள்ளியில் போய் நிற்கின்றது. 2009 முள்ளிவாய்க்கால் மண்ணில் இடம்பெற்ற பேரவலத்துக்கான தீர்வை பெற அவர்கள் பல வழிகளிலும் அகிம்சை ரீதியாக போராடி வருகின்றன. இறுதிப் போரில் இடம்பெற்றதாக கூறப்படும் மனித உரிமை மீறல்கள் படுகொலைகள் வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் ஆகியவற்றுக்கான தீர்வை பெற ஐ.நா மனித உரிமை கூட்டத்தொடர்களில் தங்களது நியாகபூர்வ அறிக்கைகளை சமர்ப்பித்து உலக நாடுகளின் உதவியுடன் ஓர் விசாரணைப் பொறிமுறையை கொண்டு வரவும் இவ் மனித உரிமை மீறலில் ஈடுபட்டவர்களுக்கு தண்டனை பெற்றுக்கொடுக்கவும் காணமல் ஆக்கப்பட்டவர்களுக்கான பொறுப்பு கூறலை இலங்கை அரசிடம் இருந்து பெறவும் பல ஆண்டுகாலம்



முயற்சித்து வரும் நிலையில் இதுவரை எவ்வித முன்னேற்றமும் இன்றி ஆறின கஞ்சி பழம் கஞ்சியான நிலையில் தான் ஐ.நா கூட்டத்தொடரின் தமிழர்களின் பிரச்சனை செல்லுகின்றது. இம்முறை கூட்டத்தொடர்களிலும் பிரித்தானியா கனடா போன்ற நாடுகளின் ஆரம்ப அறிக்கைகளிலும் ஐ.நாவின் பொதுச் செயலாளர் நாயகத்தின் அறிக்கையிலும் தமிழர்களுக்கான தீர்வு விடயத்திலும் அரசுக்கெதிரான தீர்மானங்கள் எதனை பெரியளவில் பேசப்படவில்லை என்பதுடன் உள்ளக பொறிமுறை விசாரணைக்கு அரசை உட்படுத்துவதற்கும் கால அவகாசம் ஒன்றை வழங்குவதற்கும் அத்துடன் உலகில் தற்பொழுது பெரும் மனித பேரவலத்தை ஏற்படுத்தி வரும் கொரோனா வைரஸ் காரணமாக ஏற்பட்டுள்ள மனித உயிரிழப்புகள் பொருளாதார ரீதியான பின்னடைவுகள் போன்றவற்றிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு தமிழ் இனத்துக்கு இறுதி யுத்தத்தில் நேர்ந்த பேரவலத்துக்கான தீர்வை பெற ஓர் நீட்சி தன்மையான நிலையில் ஐ.நா மனித உரிமை கூட்டத்தொடர்களில் இடம்பெற்று சென்றால் அதன் வீரியத் தன்மை குறைந்து அன்று நடந்த அவலங்களின் வலிகள் குறைந்து அன்று நடந்த இழப்புக்கள் மூடி மறைக்கப்பட்டு முற்றாக செயலற்ற நிலைக்கு தள்ளப்படும் பின்பு அப்படி ஓர் சம்பவம் இடம்பெற்றதா என்ற கேள்வி கூட ஐ.நா மனித உரிமை அமையத்தினால் கேட்கப்பட்டால் ஆச்சரியப்பட தேவையில்லை. விடுதலைப்புலிகளின் ஆயுதப் போராட்டமும் ஒரு நீட்சித்தன்மையான நிலையில் சென்றாதாலும் உலகின் நிலைமாறுகால அரசியல் மாற்றங்களை கணக்கில் கொள்ளாததுமே அவ் ஆயுதப்போராட்டம் முடிவுக்கு வர காரணமானது ஒருபெரும் ஆயுத பலம் கொண்ட அமைப்பாக இருந்த விடுதலைப்புலிகளுக்கே இந்நிலை என்றால் இன்று ஆயுதபலமற்று பேரம்பேசும் சக்தி இன்றி நாட்டாற்றில் விடப்பட்டது போல் உள்ள தமிழினம் எவ்வாறு தீர்வைபெறப் போகின்றது என்பதே இங்குள்ள கேள்வியாகும். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் போராட்டம் நான்கு வருடங்கள் தாண்டி வெற்றிகரமாக சென்று கொண்டிருக்கின்றது. இதனை இங்கு நகைச்சுவையாகவோ ஏழுது மோனையிலோ குறிப்பிடவில்லை. காணாமல் போனவர்களின் உறவினர்கள் தமது பிள்ளையை தொலைத்தவர்கள் என அண்மையில் தூற்றுக்கணக்கான பெற்றோர் மரணமடைந்து செல்வதை செய்திகள் ஊடாக பார்க்கப்படுகின்றது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் எல்லோரும் இறந்த பின்னர் யாருக்கு நீதி தேவை அரசும் அதனைத்தான் எதிர் பார்க்கின்றது குறைந்தது இன்னும் ஓர் நான்கைந்து வருடங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டம் அவர்களது இயற்கை மரணங்களுடன் முடிவுறும் என எதிர்பார்க்கின்றது. இந்நிலையில் இவ் அவலங்களை பார்த்தும் பார்க்காமல் சென்று தமிழ் அரசியல் தலைமைகள் இனி என்ன செய்வதாக உத்தேசம் நித்திரையில் இருந்து எழும்பியது போல் பொத்துவில் - பொலிகண்டி போராட்டத்தை நடாத்தினீர்கள் வெற்றிகரமாக செய்து விட்டோம் என செல்பி எடுத்து போட்டார்கள் போராட்ட பிரகடனத்தை வாசித்துவிட்டீர்கள் மீண்டும் நித்திரைக்கு சென்று விட்டீர்களா இனி ஐ.நா கூட்டத்தொடர் முடிவுற்றதும் அதில் அரசுக்கு ஆதரவாக எந்த நாடுகள் செயற்பட்டது என பட்டிமன்றம் போட்டு அந்நாடுகளை எதிர்த்து இங்கு ஆர்ப்பாட்டம் செய்யலாம் என யோசிப்பீர்கள். அல்லது அடுத்த கூட்டத்தொடர் வரையும் எவ்வாறு தமிழ் மக்களை ஏமாற்றலாம் என யோசிப்பீர்கள் பத்து கட்சிகள் ஒன்றாக இணையப்போகின்றோம் பேரவை அமைக்க போகின்றோம் என்று கூட்டம் போட்டு சொல்லத் தொடங்கி விட்டீர்கள் பிறகு அந்த பேரவைக்குள் அவர்கள் ஒரு கொள்கைக்கு வருகின்றார்கள். இல்லை என்று திரும்பவும் குழம்பியடித்து அதற்கு விளக்கம் கொடுக்க ஒரு பத்திரிகையாளர் மாநாடு போடுவீர்கள் இவ்வாறு கால காலமாக தமிழ் மக்களை ஏமாற்றி உங்கள் சுயலாப அரசியலை எவ்வளவுகாலம்செய்யபோகின்றீர்கள் அரசும் இதனை பார்த்துக் கொண்டு இருக்கின்றது இன்னும் சில வருடங்களில் தமிழ் அரசியல் தலைமைகள் அவர்கள் எல்லோரும் இயற்கை மரணமடைந்துவிடுவார்கள் பிறகு பிரச்சனை வராது என அரசு உறுதியாக இருக்கின்றது.

அரசின் நிகழ்ச்சி நிரலுக்கு நீங்கள் செயல் வடிவம் கொடுத்துக்கொண்டு இருந்தது போதும் வெறுமனே வெள்ளைக்கார தூதுவர்கள் வந்தவுடன் அவர்களுடன் ஆணித்தரமாக பேசினோம். இடித்துரைத்தோம் கலந்தாலோசித்துள்ளோம். காட்டமாக கூறியுள்ளோம் என வெறும் வாய் மெல்லாமல் ஆக்கபூர்வமாக செயல்படுத்த முனையுங்கள் வெறுமனே தூதுவர்களுடன் பேசி ஒருபயனும் அடையப்போவதில்லை. மேடையில் நின்று பேசுவதற்கே பலமிழந்துள்ள நீங்கள் இனியும் பொறுக்க மாட்டோம் ஆயுதம் ஏந்துவோம் என வீறாப்பு கதைகளை ஒதுக்கிவிட்டு தமிழ் இளைஞர்களை உசுப்பேற்றி கொலைக்களத்துக்கு அனுப்பாமல் தீர்க்கமான ஓர் அரசியல் முடிவை எடுக்க ஓரணியில் திரண்டு வாருங்கள் உங்களின் அரசியல் காலம் முடிவதற்குள் அதனை அடுத்த சந்ததியினருக்கு தகுதி வாய்ந்தவர்களுக்கு கடத்துங்கள். அளப்பரிய அர்ப்பணிப்புகளும் எண்ணற்ற தியாகங்களும் இம் மண்ணில் நிகழ்ந்துள்ளன. அவ் அர்ப்பணிப்புகளை கொச்சைப்படுத்தாமலும் அவர்களது தியாகங்கள் மீதேறி அரசியல் செய்யாமலும் தமிழர்களை அகிம்சை ரீதியான தொடர் போராட்டங்களை முன்னெடுக்க வழி கோலுங்கள் குறைந்த பட்சம் எதிர்காலத்தில் தமிழர்களின் இருப்பை தக்கவைக்கவாவது தற்துணிவுடன் செயற்படுங்கள் செல்பி எடுப்பதும் இவ்வளவு கூட்டத்தை எமது கட்சி சேர்த்தது எனக் கணக்கு காட்டாமல் உலகில் தமிழினம் என்ற ஓர் இனத்தை அடையாளப்படுத்தி விட்டுப்போன நிலையை அழிக்காமல் எமது இனத்தின் .இலக்கை அடைய பக்கபலமாகவும் நீட்சித் தன்மையற்றதாகவும் சரியான திசையிலும் ஓரணியில் .இணைந்து செயற்பட வாருங்கள் என தமிழினம் அழைத்து நிற்கின்றது.

**தமிழ் கிறுக்கன்**

# தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையும் இலங்கை அரசுகளின் ஏமாற்று வித்தையும்



தமிழர்களின் தாயகம் சுயநிர்ணயம் நோக்கிய ஆயுதப் போராட்டம் 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் மண்ணில் மௌனிக்கப்பட்டு சுமார் 11 ஆண்டுகள் கடந்துவிட்டது. ஆனால் அந்த இறுதிப்போர் தந்த அவல வடு இன்னும் தமிழ் மக்களிடம் இருந்து ஆறவில்லை. தமிழர்கள் தமது மொழியாலும் கலாச்சாரங்களாலும் கல்வி வேள்விகளாலும் உலகில் மிகச் சிறந்தவர்களாகவும் ஆண்ட பரம்பரையாகவும் இருந்த இனம் 1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்தன. பின்னர் ஆட்சியில் அமர்ந்த சிங்கள பௌத்த சித்தாந்தமும் பெரும்பான்மை இனம் என்ற மமதையுடன் இன அடக்குமுறைகளையும் கையாளத் தொடங்கிய சிங்கள தலைவர்களால் தமிழினம் தமக்கு அடிமையாக இருக்க வேண்டும் என சுதந்திரத்தின் பின் அவர்கள் தமது கொள்கைகளை வகுத்து செயல்படத் தொடங்கினர் இதனால் வெகுண்டெழுந்த தமிழினம் அகிம்சை ஆயுதப்போராட்டம் என பலவழிகளிலும் போராடியது. இப் போராட்டங்களை உலக வல்லரசுகளின் உதவியுடன் அழித்தது மட்டுமன்றி இப்போராட்டத்துடன் சம்பந்தப்படாத பல அப்பாவி இளைஞர் நீண்டகாலமாக அரசியல் கைதிகளாக சிறைகளில் வாடி வருகின்றனர்.

இவ்வாறு இலங்கையில் உள்ள சிறைகளில் பலநூற்றுக் கணக்கானோர் உள்ளனர். இதைவிட இறுதி யுத்தத்தில் இராணுவத்திடம் வெள்ளைக் கொடியுடன் சரணடைந்த போராளிகள் பொது மக்கள் சமய மதகுருமார்கள் என பல நூற்றுக்கணக்கானோர். இதுவரை அவர்களுக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை. இலங்கையில் யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட காலங்களில் சிறைச்சாலைகள் ஒன்று இரண்டாக காணப்பட்ட நிலையில் தமிழர்களுக்கு என்றே சிறைச்சாலைகள் பல்கி பெருகிச் சென்றது. குறிப்பாக வெலிக்கடை சிறைச்சாலை, மகசீன் சிறைச்சாலை, காலி பூசா சிறைச்சாலை, போகம்பர சிறைச்சாலை, அனுராதபுரம் சிறைச்சாலை என்பன தமிழர்களை அடைத்து வைப்பதற்கென உருவாக்கப்பட்ட சிறைச்சாலைகள் ஆகும். இச் சிறைச்சாலைகளில் காலம்காலமாக பல அரசியல் படுகொலைகள், சிறைச்சாலை கலவரம் என்ற அடிப்படையில் நடந்து பல அப்பாவி தமிழ் அரசியல் கைதிகள் படுகொலை செய்யப்பட்டனர். இன்னும் சில அரசியல் கைதிகள் மனவிரக்தி அடைந்து மனநிலை பாதிக்கப்பட்டவர்களாக சிறைகளில் உள்ளனர். இன்னும் சிலரின் நிலை மிகப் பரிதாபகரமானது அவர்கள் எவ்வித விசாரணைகளும் இன்றி பயங்கரவாத தடைச்சட்டம் என்ற போர்வையில் கைது செய்யப்பட்டு சிறைகளில் வாடுகின்றனர். அவர்களில் சிலர் சிறைச்சாலைக்குள்ளேயே இயற்கை மரணமடைகின்றனர். பல ஆண்டுகளாக விசாரணைகள் இன்றி சிறைகளில் வாடும் சிறைக் கைதிகள் தமது விடுதலை அல்லது தமக்கான நீதியான விசாரணை இடம்பெறக்கோரி பல தடவைகள் உண்ணாநோன்பு போராட்டங்கள் மேற்கொண்டு வந்துள்ளனர். அவர்களின் சாத்வீக ரீதியாக சாகும் வரை போராட்டத்தை எமது தமிழ் அரசியல் தலைமைகளும் அரச அடிவருடி தமிழ் கட்சிகளும் வாக்குறுதிகளை வழங்கி உண்ணாநோன்பு போராட்டத்தை முடித்து வைப்பார்கள் அவர்களது விடுதலை அல்லது விசாரணை தொடர்பான கால அவகாசத்தை கோரி அரசியல் கட்சிகளின் போராட்டத்தை முடித்து வைப்பார்கள் இவ்வாறு கால அவகாசம் எடுத்து இன்று அவ் அரசியல் கைதிகள் சிறைகளில் இயற்கை மரணமடைந்து வருகின்றனர்.

இலங்கை பேரினவாத அரசுகள் மாறி மாறி ஆட்சிக்கு வரும் பொழுது தமிழர்களின் வாக்குகளை பெற தாங்கள் பதவியேற்று 3 மாதகாலத்துக்குள் துரித கதியில் விசாரணை மேற்கொண்டு கைதிகளின் விடுதலைக்கு ஓர் முடிவு எடுப்போம் என்றும் அவர்களது விடுதலைக்கு வழி சமைப்போம் எனக்கூறி தமிழர்களின் வாக்குகளை பெற்றவுடன் அவ் வாக்குறுதிகள் எல்லாம் செல்லாக் காசாகிவிடும். இதே சுயநல அரசியல் தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் என்று கூறிக்கொள்ளும் தமிழ் அரசியல் தலைமைகளும் இவ் விடயத்தை தமது தேர்தல் கால பிரச்சாரத்துக்கு பயன்படுத்தி வெற்றி கொள்வார்கள். அரசியல் கைதிகளின் விடுதலைக்காக தாம் முழுமனத்துடன் பாடுபடுவோம் என வாக்குறுதிகள் வழங்குவார்கள் ஆனால் இதுவரை எவ்வித பிரியோசனமும் கிடைக்கவில்லை. கைதிகளின் விடுதலை கானல் நீராய் தான் உள்ளது. இந்நிலையில் யுத்த காலங்களில் பல அப்பாவி மக்களை படுகொலை செய்த பல இராணுவ கடற்படை அதிகாரிகள் முதல் அதற்கு துணை நின்ற தமிழர்களுக்கு துரோக அரசியல் செய்யும் சில தமிழ் கட்சிகளின் அங்கத்தவர்கள் தலைவர்கள் என அனைவரும் தற்பொழுது உள்ள ஆட்சியின் ஜனாதிபதி அவர்களால் பொது மன்னிப்பு என்ற அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இதில் குறிப்பிட்டு சொல்லக்கூடியதான நிகழ்வுகள் செம்மணிபடுகொலை மற்றும் கிருஷாந்தி பாலியல் பலாத்காரம் செய்து படுகொலை செய்து இராணுவ முனைக்குள் புதைத்த இராணுவ வீரர்கள் நீதிமன்றத்தால் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு தீர்பளித்த பொழுதிலும் அவர்கள் இப்பொழுது விடுதலை செய்யப்பட்டதாக தெரியவருகின்றது. அடுத்து மிருசுவில் அப்பாவி இளைஞர்கள் அடித்து படுகொலை செய்து இராணுவ முகாமுக்குள் மூடிய சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவ வீரர்கள் கைது செய்யப்பட்டு குற்றம் நிரூபிக்கப்பட்டு சிறைகளில் இருந்த நிலையில் அண்மையில் ஜனாதிபதியின் பொது மன்னிப்பில் விடுதலையாகி உள்ளனர். அடுத்து திருகோணமலை தொண்டு நிறுவன ஊழியர்கள் படுகொலையுடன் தொடர்புடைய கடற்படையினர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பில் வைத்து படுகொலை செய்யப்பட்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரும் ரவிராஜ் அவர்களின் படுகொலை தொடர்பான சந்தேக நபர் விடுதலை செய்யப்பட்டு அவ் விசாரணை முடித்து வைக்கப்பட்டது. மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் அவர்கள் கிறிஸ்மஸ் ஆராதனை இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளை ஆலயத்துக்குள் வைத்து படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி தலைவர் சிவனேசன்துரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) அனைத்து வழக்குகளிலும் இருந்து விடுதலையானார் என அறிவிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்.

விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு தளபதியும் அவ் அமைப்பின் முக்கிய தளபதியுமான கருணா அம்மான் அவர்கள் அவர் தளபதியாக இருந்த காலத்தில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் பல பொலிசார் கொல்லப்பட்ட நிலையில் இன்று அவர் எதுவித விசாரணைகளுமின்றி சுதந்திரமாக செயற்பட்டு வருகின்றார். அதே போல் விடுதலைப் புலிகளின் வெளிநாட்டு பொறுப்பாக இருந்த கே.பி என அழைக்கப்படும் கே.பத்மநாதன் அவர்கள் மலேசியாவில் வைத்து கைது செய்யப்பட்டு .இலங்கைக்கு கொண்டு வரப்பட்டு அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்களால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இன்னும் பல விடுதலைப்புலிகள் அமைப்பின் தளபதிகள் அரசியல்துறை தலைவர்கள் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட நிலையில் இவர்களுக்கு கீழ் இயங்கிய சில உறுப்பினர்களும் எவ்வித சம்பந்தமும் இல்லாமல் பொய்க்குற்றச்சாட்டின் அடிப்படையிலும் விசாரணைகள் இன்றி சிறையில் வாடும் அரசியல் கைதிகளுக்கு இதுவரை எவ்வித முடிவும் இன்றி உள்ளனர். பாதுகாப்பு அமைச்சர் பிரதமர் அமைச்சரவை ஊடகப்பேச்சாளர் உள்ளிட்டோர் அரசியல் கைதிகள் எவரும் இல்லை என்று சொல்லியுள்ளனர். அப்படி என்றால் சிறைகளில் வாடும் தரப்பினர் யார் தங்கள் விடுதலை கோரி அகிம்சை வழிப் போராட்டங்கள் நடத்துபவர் யார் சிறைக் கலவரங்களில் கொல்லப்படுவர்கள் யார் இதற்கான விடை என்ன தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்று சிறைச்சாலை கைதிகளுக்கும் பரவி மிகப்பெரும் கொத்தனியாக உருவாகி உள்ளது. இதில் சில கைதிகள் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு இவ் வைரஸினால் பாதிக்கப்படும் நிலை அறிந்து பல கைதிகள் பொது மன்னிப்பு அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் சிறு குற்றங்கள் தொடக்கம் பாரியளவு குற்றங்கள் புரிந்தவர்களும் உள்ளடங்குகின்றனர்.

ஆனால் இதனை வைத்தாவது ஒரு சில அரசியல் கைதிகளை விடுதலை பண்ணக்கூட இவ் அரசு தயாராக இல்லை என்பதையே அண்மைய செயற்பாடுகள் காட்டி நிற்கின்றன. இலங்கையில் 1960 களில் அரசுக்கெதிரான பாரிய கிளர்ச்சியை செய்த ஜே.வி.பி உறுப்பினர்கள் பலர் விடுதலை செய்யப்பட்டனர். அவர்களை விடுதலை செய்த சிங்கள அரசு தமிழ் மக்கள் என்ற காரணத்தால் இக் கைதிகளை விடுதலை செய்வதை மறுக்கின்றது. ஜே.வி.பியினர் நாட்டை பிடிக்கவில்லை என்ற வரைவிலக்கண காரணத்தை கூறும் அரசு விடுதலைப்புலிகள் நாட்டை துண்டாட முயற்சித்தனர் என்று கூறுகின்றது. அப்படி என்றால் 1960 களில் ஜே.வி.பி யை ஒடுக்க பாகிஸ்தான் இந்தியா இராணுவத்தை ஏன் அழைத்தது.

ஆகவே இதில் இருந்து ஒன்று விளங்குகின்றது. ஒரே நாடு ஒரே சட்டம் என்பது தமிழர்களுக்கு இல்லை. தற்பொழுது ஐ.நா மனித உரிமை கூட்டத்தொடர் இடம்பெற்று வரும் நிலையில் இக் கூட்டத் தொடரிலாவது தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை பற்றி சரியான முடிவு ஒன்று வரவேண்டும் என்பதுடன் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு சரியான தீர்வு கிடைக்க வேண்டும். என புலம் பெயர் தமிழ் அமைப்புகளும் இங்குள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களும் தமிழ் அரசியல் தலைமைகளும் கூட்டாக போராடி வருகின்றனர். ஆனால் இத்தொடரும்பத்தோடு பதினொன்றாக தான் இருக்க போகின்றது அரசியல் கைதிகளின் விவகாரத்தில் எதுவித முன்னேற்றமும் இல்லை. சிறையில் அக்கைதிகள் வாட இங்கு அவர்களின் குடும்பங்கள் அவர்களை நினைத்து ஏங்கிய படி தம் வாழ் நாளை கழிப்பதுடன் அவர்களை நினைத்து அவர்களது உறவினர்கள் நோய்வாய்க்குட்பட்டு இறக்கும்சம்பவங்களும் அதிகரித்து செல்லுகின்றது.

தமிழ் அரசியல் தலைமைகளே இனியும் காலம் தாழ்த்தாமல் பத்து கட்சிகள் ஒன்றிணைகின்றோம் அடுத்த கட்டத்துக்கு நகருகின்றோம் தமிழ் மக்களுக்கு சரியான தீர்வை பெற இடித்துரைக்கின்றோம் என கூறி வெறும் வாய் மெல்லாமல் சரியானதொரு முடிவை எடுத்து மிகதியாக இருக்கும் தமிழ் அரசியல் கைதிகளையாவது மீட்பதற்கு காத்திரமான முடிவை எடுப்பதுடன் இவ் ஐ.நா தொடரை பயன்படுத்தி அவர்களின் விடுதலையை உறுதி செய்யுங்கள். அடுத்து தொடர் சாத்வீக போராட்டத்தை தன்னார்வம் கொண்டு மக்கள் எழுச்சியாக மேற்கொள்ளவும் சகல சமய தலைமைகளும் அதற்கு உறுதுணையாக நின்று செயற்படவும் முயலுங்கள் தொடர் மக்கள்எழுச்சிபோராட்டங்கள்தோற்றதில்லை என வரலாறுகள் கூறி நிற்கின்றன. ஆகவே இவ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு மக்கள்தன்னார்வம்கொண்டுஎழுச்சிகொள்ள துணை நில்லுங்கள் தமிழ் அரசியல் கைதிகள் இறுதிக்காலத்திலாவது அவர்கள் உறவுகளுடன் தங்கள் வாழ்வை கழிக்க முயற்சி செய்யுங்கள் சாத்தியப்படாது என்றால் முயற்சிக்கவில்லை என்றே அர்த்தம்.

தாயகத்தான்

# வட இலங்கையில் தீவுகள் மீதான சீனாவின் செல்வாக்கு இந்தியாவின் இராஜதந்திரத்திற்கு மீண்டுமொரு தோல்வியா?



இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் பிராந்திய ரீதியில் SAGAR (Security and growth for all in the Region) எனும் திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி அரசாங்கம் முன்வைத்து செயல்பட்டது. அதில் தென்னாசி நாடுகளுடனான உறவு இந்தியாவின் பாதுகாப்புப் பொறுத்து முதலிடம் என்ற எண்ணத்தை வெளிப்படுத்தியது. ஆனால் தென்னாசியப் பிராந்திய நாடுகள் சீனாவுடனான நட்புறவைப் பலப்படுத்தியதுடன் இந்தியாவின் சகார் திட்டத்திற்கு முன்னும் பின்னும் சீன நட்பினை பலப்படுத்திக் கொண்டுள்ளதை அவதானிக்கும் போது இந்தியாவின் பிராந்திய ரீதியான இராஜதந்திரம் தொடர் தோல்வியாகவே பதிவாகிவருகிறது. இந்தியா பிராந்திய நாடுகளை கையாளுவதென்பது சீனாவையும் கையாளுவதாகவே தெரிகிறது. இதில் இலங்கையில் இந்தியாவுக்கு ஏற்பட்டுவரும் நெருக்கடியானதுஇந்தியாவின்பாதுகாப்புக்கு ஒரே வாய்ப்பாக இருந்த தென்பகுதியும் சீனாவினது அச்சுறுத்தலுக்குள் தள்ளப்பட்டுள்ளது. ஏறக்குறைய இந்தியா சீனாவின் உபாயங்களால் முழுமையாக சுற்றிவளைக்கப்பட்டுள்ளது. இக்கட்டுரையும் இந்தியாவின் பிராந்திய ரீதியான இராஜதந்திரத் தோல்வியை இலங்கையுடன் தொடர்புபடுத்தி தேடுவதாக உள்ளது.

அதனடிப்படையில் அண்மைக்காலம் இரண்டு பிரதான விடயங்கள் இலங்கையில் இந்தியாவின் நலனுக்கு பாதிப்பானதாக நிகழ்ந்துள்ளன. 2005 ஆம் ஆண்டுக்கு பின்னர் அதிகமான விடயங்களில் இந்திய அரசியல் நலனுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் விதத்தில் இலங்கையின் இராஜதந்திர அணுகுமுறை காணப்பட்டது. அப்போதெல்லாம் இந்தியா இலங்கை அரசாங்கங்களுடன் ஒத்துழைப்பதும் அதன் நலன்களை பாதுகாப்பதுமாகவே செயல்பட்டதே அன்றி இலங்கையின் நலன்களுக்கு விரோதமாக செயல்படவில்லை என்றே கூறலாம். இலங்கைத் தமிழர் மீது நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்களையும் அடக்குமுறைகளையும் அரசாங்கம் மேற்கொள்ளும் பேதெல்லாம் இந்தியா மௌனம் சாதித்தது அல்லது இலங்கை அரசாங்கத்தினை சர்வதேச பொறிமுறைகளுக்கு முன் பாதுகாத்தே வந்துள்ளது. அதனையெல்லாம் இராஜதந்திர செய்முறைக்குள் முன்னிறுத்திக் கொண்டு இலங்கை அரசாங்கமும் ஆட்சியாளர்களும் இந்தியாவையும் உலகத்தினையும் கையாளும் திறனை வளர்த்துக் கொண்டனர். இதனை எல்லாம் தமக்கு சாதகமென கருதிய இந்தியா இலங்கையை திருப்திப்படுத்தும் செய்முறையில் ஈடுபட்டுவந்தது. அதன் விளைவுகளைத் தற்போது எதிர்கொண்டுவருகிறதை அவதானிக்க முடிகிறது. ஒன்று கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையம் தொடர்பில் இலங்கையின் நடவடிக்கை இந்தியாவின் இராஜதந்திரத்திற்கு ஏற்பட்ட சவாலாகவே தெரிகிறது. கொவிட்-19க்குரிய தடுப்பு மருந்தினை வழங்கிய பின்பும் கிழக்கு முனையம்த்திற்கான உடன்படிக்கையை இலங்கை இரத்து செய்துள்ளமை கவனிக்க வேண்டிய விடயமாகும். அவ்வாறே இலங்கை மத்திய வங்கி இந்தியா வழங்கிய சலுகைக்கடனை மீளவழங்கியமை அதே நேரம் சீனாவிடமிருந்து மேலும் அதிக கடனைப் பெற்றுக் கொண்டமை அனைத்தும் இந்தியாவின் இராஜதந்திரத் தோல்வியாகவே மதிப்பிடப்படுகிறது.

இரண்டு இந்தியாவின் எல்லையிலிருந்து 45 மைல் தூரத்தில் அமைந்துள்ள இலங்கையின் வடபகுதியிலுள்ள தீவுகளான நெடுந்தீவு நயினாதீவு மற்றும் அனலைதீவு என்பவற்றை சீனாவின் காற்று மற்று சூரிய மின் உற்பத்தி மேற்கோள்ளும் சினோசர்-இடெக்வின் (Sinosar-Etechwin) நிறுவனத்திற்கு வழங்கியுள்ளமை முக்கிய அரசியல் பதிவாக உள்ளது.காற்றாலை மற்றும் சூரிய ஒளி மின்சாரத்தினை தயாரிக்கும் திட்டத்தினை 87.60 கோடி செலவீனத்தில் மேற்கொள்ள சீன நிறுவனமும் இலங்கை மின்சார சபையும் ஒப்பமிட்டிருப்பதுடன் கடந்த 17.01.2021 இல் அமைச்சரவை ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதற்கான நிதியினை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்குகிறது. இத்தகைய கலப்பு மின் திட்டமானது இப்பிரதேச அபிவிருத்தியை இலக்கு வைத்துள்ளதாகவும் அதனூடாக உல்லாசப்பயணத் துறையை வளர்க்க திட்டமிடுவதாகவும் தெரியவருகிறது.

மேற்குறித்த இரண்டு விடயங்களிலும் இந்தியத் தரப்பு இலங்கை அரசாங்கத்திற்கு தனது ஆட்சேபனையை தெரிவித்துள்ளமை தெரியவருகிறது. குறிப்பாக கிழக்கு முனையத்தினை மூன்று நாடுகளும் மேற்கொண்ட உடன்படிக்கையினை உறுதி செய்யுமாறு கோரியுள்ளது. அவ்வாறே வடபகுதியில் அமைந்துள்ள தீவுகளை சீனக் கம்பனிக்கு வழங்கியமை இந்தியாவின் தேசிய பாதுகாப்புடன் நேரடியாகத் தொடர்புபட்டதென்றும் புதுடில்லி தெரிவித்துள்ளது. அது மட்டுமன்றி இத்தகைய திட்டம் ஒன்றுக்கான ஒத்துழைப்பைக் கோரியிருந்தால் இந்தியா முழுமையாக ஆதரித்திருக்கும் எனவும் இந்தியா தெரிவித்துள்ளது. அதனைக் கடந்து இந்தியா எதனையும் மேற்கொண்டதாக தெரியவில்லை. ஆனால் அண்மையில் வடக்கு கிழக்கு தழுவிய நடைபயணப் போராட்டம் இந்தியாவின் அனுசரணையுடன் நிகழ்ந்ததாகவும் முள்ளிவாய்க்கால் தூபியின் மீள் உருவாக்கத்திற்கான நகர்வுகளில் இந்தியா இருப்பதாகவும் ஊகங்கள் நிலவுகிறது. அதனை உறுதிப்படுத்தும் தகவல்கள் எவையும் வெளியாகவில்லை என்றே தெரிகிறது. ஆனாலும் அவற்றுக்கான வாய்ப்புக்கள் இல்லாமலில்லை என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். அது மட்டுமன்றி இராஜசபாவில் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் உரையாற்றும் போது தமிழர்களது கோரிக்கைகளை நிறைவுசெய்வதே இலங்கை அரசாங்கத்தின் உள்நாட்டுப் பொறிமுறைக்கு சாதகமானது எனத் தெரிவித்திருந்தார். இவற்றைக் கடந்து இந்தியா இலங்கை விடயத்தில் பாரிய நகர்வுகள் எதனையும் மேற்கொள்ளவில்லை என்றே கூறவேண்டும்.

இந்தியாவைப் பொறுத்தவரை இலங்கை சீன நெருக்கம் தனது நலனுக்கு ஆபத்தானது என கருதுகிறது. அதனை தகர்ப்பதற்கான முனைப்புகளை ஏற்படுத்த முனைகிறது. அதன் பிரகாரமே வடமாகாணத்தில் சீனாவுக்கு வழங்கிய தீவுகளை இந்தியா தனது நலனுக்கு ஆபத்தானது எனக் கருதுகிறது. குறிப்பாக இந்தியாவின் வடக்கு கிழக்கு மற்றும் மேற்குப் பகுதி அனைத்துமே இந்தியாவுக்கு ஆபத்தான பகுதிகளாகும். பிரிட்டிஷ் -இந்தியாவின் பாதுகாப்பு வலயங்கள் அனைத்தையும் சுதந்திர இந்தியா பறிகொடுத்துள்ளது. மிஞ்சியிருந்த தென்பகுதியையும் தற்போது முழுமையாக இந்தியா இழந்துள்ளது. இந்தியாவின் பாதுகாப்புக்கான எல்லையாகக் காணப்படும் இலங்கை இந்தியாவுக்கு எதிரான சக்திகளிடம் சென்றுவிடும் என்பதற்காகவே உருவானதே இலங்கை-இந்திய உடன்படிக்கை. அப்போது அமெரிக்காவிடம் சென்றுவிடும் என்ற அச்சம் இந்திய ஆளும் வர்க்கத்திடம் காணப்பட்டது. ஆனால் தற்போது அதற்கான சூழல் ஒன்றுக்கான வாய்ப்பு தென்படுவதாகவோ அல்லது இலங்கை-இந்திய உடன்படிக்கையை மீள உறுதிப்படுத்துவதற்கான வாய்ப்போ தென்படுவதாக தெரியவில்லை. மாறாக கண்டனமும் எச்சரிக்கையும் மட்டுமே இந்தியத் தரப்பு தனது இராஜதந்திர நகர்வாகக் கருதுகிறது. அல்லது இலங்கைத் தமிழரை மீளவும் அகிம்சை வழியாக பயன்படுத்துவதற்கான சூழலை உருவாக்கி நகர்த்துவதாக தெரிகிறது.இவை அனைத்துமே தோல்விகரமான அணுகுமுறைகளாகவே அமைந்துள்ளன. அமெரிக்கா திருகோணமலையைத் தான் அப்போது இலக்கு வைத்திருந்தது. சீனா இந்தியாவுக்கு அருகிலுள்ள தீவுகளை இலக்கு வைத்துள்ளது. ஏறக்குறைய இந்தியாவின் வாசலை சீனா எட்டிவிட்டது எனலாம்.

இதன் மூலம் முழுமையான தென்னாசியப் பிராந்தியம் சீனாவின் கைகளுக்குள் சிக்கியுள்ளது. ஏற்கனவே பாகிஸ்தானின் துறைமுகமான குவாடரையும் அதன் வழியாக கொரகராம் நெடுஞ்சாலையையும் இணைத்துள்ள சீனா அண்மையில் லடாக் பகுதியையும் தனது செல்வாக்குக்குள் கொண்டுவந்துள்ளது. இது பாகிஸ்தான் இந்திய எல்லையூடாக நகர்ந்து சீனாவின் எல்லைக்குள் நுழைகிறது. அவ்வாறே கடல்வழியாக மாலைதீவையும் இலங்கையையும் வங்களாதேஷ் துறை முகமான சிட்டங்கொங்கையும் மியான்மாரின் தீவுகளான சிற்வே உள்ளடங்கலாக சடல்கி கோக்கோஸ் போன்ற தீவுகளையும் மலாக்கா நீரிணைவரையும் நகர்கிறது. அதனை விட நேபாளம் மற்றும் பூட்டானுடன் எல்லையை அடிப்படையாகக் கொண்டும் பொருளாதார ஒத்துழைப்பினை மையமாகக் கொண்டும் நெருக்கமான உறவினை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையில் ஹம்பாந்தோட்டைத் துறைமுகத்துடன் ஆரம்பமான சீன இலங்கை நெருக்கம் தற்போது கொழும்புத் துறைமுகத்தினையும் வடக்கு பகுதியிலுள்ள அனலைதீவு நெடுந்தீவ மற்றும் நயினாதீவு வரையும் விரிவடைந்துள்ளது. அதனைவிட சீனா நுரைச்சோலை அனல்மின் நிலையம் உட்பட பல பொருளாதார வலயங்களையும் கலாசாரமற்றும்மருத்துவநிலையங்களையும் அமைத்து இலங்கையின் அபிவிருத்திக்கு பங்காற்றுகிறது குறிப்பிடத்தக்கதாகும்.இவை அனைத்தும் தென்னாசியப் பிராந்தியத்தில் இந்தியாவுக்கு மாற்றீடான ஒரு நட்பு நாடாக சீனா மாறியிருப்பதைக் காட்டுகிறது. அதனால் சீனாவின் அணுகுமுறைகள் இந்தியாவுக்கு எதிரானதாகவும் அதன் நலன்களை முற்றாகவே சிதைப்பதாகவும் அமைந்துள்ளது.


ஏறக்குறைய இந்தியாவை சுற்றிவளைத்துள்ள சீனாவின் நகர்வு பொருளாதார ரீதியிலும் மென் அதிகாரத் தளத்திலுமே காணப்படுகிறது. இதன் மூலம் இந்தியாவின் பலம் படிப்படியாக மட்டுப்படுத்தப்படுவதையும் அதன் செல்வாக்குக்குள் தென்னாசியா இல்லாது போவதனையும் காணமுடிகிறது. இந்து சமுத்திரத்தின் மையப்பகுதியே தென்னாசியா என்ற நிலையில் சீனா இந்துசமுத்திரத்தை முழுமையாக தனது செல்வாக்குப் பிராந்தியமாக மாற்றி வருகிறது. இந்தோ-பசுபிக் உபாயம் கூட அத்தகைய சீனாவின் ஆதிக்கத்தினை எதிர்கொண்டு வெற்றி கொள்ள முடியாத நிலையிலேயே உள்ளது. இந்தோ-பசுபிக் உபாயத்தின் இரு பிரதான நாடுகளான இந்தியாவையும் ஜப்பானையும் இலங்கை கிழக்கு முனையத்தில் நிராகரித்துள்ளது. 2019இல் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையை தன்னிச்சையாக முறித்துக்கொண்டமை ஏறக்குறைய இந்தோ-பசுபிக் உபாயத்தின் தோல்வியாகவே தெரிகிறது.

எனவே இந்தியா கடந்த காலப்பகுதியில் இலங்கை உட்பட தென்னாசிய நாடுகளில் மேற்கொண்டு வந்த இராஜதந்திர அணுகுமுறைகள் அனைத்துமே தோல்வியை நோக்கியுள்ளது.தென்னாசியா நாடுகள் அனைத்துமே இந்தியாவின் நெருக்கமான நட்புறலிருந்து விலகியுள்ளன. அதிலும் இலங்கை முழுமையாக விலகியுள்ளமை இந்தியாவின் இருப்பை பெரியளவில் பாதிப்பதாகவே தெரிகிறது. இந்தியக் கொள்கைவகுப்பாளர்கள் அரசியல் தலைமையிலுள்ளவர்கள் புலனாய்வுத் துறையினருக்கு ஆலோசனை வழங்குபவர்கள் மற்றும் புலமையாளர்கள் என்பவர்கள் இதனைக் கண்டுகொள்வார்களா? என்பது பிரதான கேள்வியாகும். அவர்கள் அனைவரும் தென்னாசிய நாடுகளில் சீனாவுக்கு போட்டியாகச் செயல்படுகின்றார்களே அன்றி சரியானதை மேற்கொள்ள தயாராவதாக தெரியவில்லை. இதன் விளைவே தென் இலங்கை மட்டுமல்ல தற்போது வட இலங்கையிலும் சீனாவின் செல்வாக்கு வலையத்திற்குள் அகப்பட ஆரம்பித்துள்ளது.

அருவி இணையத்துக்காக
பேராசிரியர் கே.ரீ.கணேசலிங்கம்



# பிராந்தியச் செய்திகள்



## மட்டக்களப்பில் விபத்து: மூவர் படுகாயம்

மட்டக்களப்பு- களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியபோரதீவில் இடம்பெற்ற வாகன விபத்தில் மூன்று பேர் படுகாயமடைந்துள்ளனர். அன்று (வெள்ளிக்கிழமை) பெரிய போரதீவு காளி கோவிலுக்கு முன்பாக, களுவாஞ்சிகுடியில் இருந்து வந்த முச்சக்கர வண்டியும் 39ஆம் கிராமத்தில் இருந்து வந்த முச்சக்கர வண்டியும் நேருக்கு நேர் மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளதாக களுவாஞ்சிகுடி பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதன்போது 39ஆம் கிராமத்தில் இருந்து வந்த முச்சக்கர வண்டியில் பயணித்த மூவர் படுகாயமடைந்த நிலையில், களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் நேருக்கு நேர் முச்சக்கர வண்டிகள் மோதிய நிலையில், ஒரு முச்சக்கர வண்டி வீதியை விட்டு விலகி பள்ளத்தில் பாய்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இந்த விபத்தில் இரண்டு முச்சக்கர வண்டிகளும் கடும் சேதத்திற்கு உள்ளாகியுள்ளதுடன் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிகுடி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.





## நல்லிணக்கத்திற்கான எடுத்துக்காட்டு யாழ். பல்கலையில் 4000 சிங்கள மாணவர்கள் – கப்ரால்

யாழ். பல்கலைக்கழகத்தில் 4000 க்கும் மேற்பட்டவர்கள் சிங்கள மாணவர்கள் கல்வி பயில்வதே நல்லிணக்கத்திற்கான எடுத்துக்காட்டு என நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 46வது கூட்டத்தொடர் நடைபெற்றுவரும் நிலையில் இந்த விடயம் தொடர்பாக வெளியிட்டுள்ள டுவிட்டரில் பதிவிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் 12 ஆயிரம் மாணவர்கள் கல்வி பயில்வதாகவும் அவர்களில் 4 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் சிங்கள மாணவர்கள் என்றும் சுட்டிக்காட்டிய அவர் இது நல்லிணக்கத்திற்கான ஒரு சிறந்த எடுத்துக்காட்டு என ஜித் நிவாட் கப்ரால் குறிப்பிட்டுள்ளார். இலங்கையில் மனித உரிமைகள், நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலுக்கான உறுதிப்பாட்டை மேற்குலக நாடுகள் வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



## தியலும நீர்வீழ்ச்சியில் மூழ்கி 9 வயதுடைய சிறுவன் உயிரிழப்பு

தியலும நீர்வீழ்ச்சியில் மூழ்கி 9 வயதுடைய சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். அன்று (வெள்ளிக்கிழமை) மாலை நீர்வீழ்ச்சியில் குளிக்கும் போது அவன் நீரில் மூழ்கி உயிரிழந்ததாக கொஸ்லாந்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிறுவனின சடலத்தை குறித்த கிராம பகுதி மக்கள் அனைவரும் இணைந்து நீர்வீழ்ச்சியிலிருந்து மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்திருந்தனர். மேலும் குறித்த சம்பவத்தில் உயிரிழந்த சிறுவன் மாகந்துரை, மாவரெல்லை பகுதியைச் சேர்ந்தவன் என கொஸ்லாந்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.





## சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்காக சிசு செரிய பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும்

சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்காக சிசு செரிய அனைத்து பஸ் சேவைகளும் குறித்த காலப்பகுதியில் சேவையில் ஈடுபடுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாகத் தேசிய போக்குவரத்து ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

சிசு செரிய பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும் போது பிற பயணிகளை பஸ்ஸில் ஏற்றக்கூடாது என ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், தவிர்க்க முடியாத காரணங்களினால் மாணவர் ஒருவரின் பெற்றோர் தமது பிள்ளைகளுடன் பாடசாலைக்குச் செல்ல அனுமதி வழங்கப்படுமென தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

சுகாதார வழிகாட்டுதல்களுக்கமைவாக மாணவர்கள் போக்குவரத்தில் ஈடுபடுமாறு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்கள் பயணம் செய்தாலும், சிசு செரிய பஸ் சேவைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை மார்ச் மாதம் முதலாம் திகதியிலிருந்து 10 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.



## நாடளாவிய ரீதியில் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் 3,871 பேர் கைது – அஜித் ரோஹண

நாடளாவிய ரீதியில் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் சுமார் 3, 871 பேர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதி பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கடந்த 25 ஆம் திகதி காலை 6 மணி முதல் இரவு 10 வரை சுற்றிவைப்பு மேற் கொள்ளப்பட்டது என அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

குறித்த சுற்றிவளைப்பு நடவடிக்கைக்காக 18 ஆயிரம் 357 பொலிஸ் அதிகாரிகள் கடமையில் ஈடுப்படுத்தப்பட்டனர்.

அத்துடன் குறித்த சுற்றிவளைப்பில் 3 அயிரத்து 871 பேர் கைது செய்யப்பட்டனர்.

குறித்த விசேட பொலிஸ் சுற்றிவைப்பு வாரந்தோறும் நாடு முழுவதும் மேற்கொள்ளப்படும் என அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.






## விளம்பரத்தில் நடிக்க சினேகா வாங்கும் சம்பளம் எவ்வளவு தெரியுமா! ஒரு நாளைக்கு இவ்வளவா!

நடிகை சினேகா அன்று முதல் இன்று வரை தன் அழகான சிரிப்பினால் அனைவரின் மனதிலும் இடம் பிடித்தவர். நடிகர் பிரசன்னாவை திருமணம் செய்து கொண்டு ஃபுல் டைம் ஃபேமிலி பெண்ணாக சில காலம் இருந்து வந்தார்.

அவருக்கு விசாகன் என்ற ஆண் குழந்தையும் பிறந்தான். அவன் தற்போது வளர்ந்த பையனாகவிட்டான். அப்பா பிரசன்னாவுடன் எடுத்துக்கொண்ட போட்டோவில் அவனை சமூக வலைதளத்தில் காணலாம்.

இரண்டாம் குழந்தை கர்ப்பமாக இருந்த போதே சினேகா சினிமாவுக்கு மீண்டும் நடிக்க வந்தார். தனுஷுடன் பட்டாஸ் படத்தில் நடித்த சமயத்தில் அவர் கர்ப்பமாக தான் இருந்தார்.

பின் பெண் குழந்தையும் பிறந்தது. விளம்பரங்களில் சினேகா மற்றும் பிரசன்னா இருவரும் நடிக்கிறார்கள்.

நடிகை சினேகா விளம்பர படங்களில் அதிகம் நடிப்பவர். அவருக்கு ஒரு நாளைக்கு ரூ 2 லட்சம் சம்பளமாக பெறுகிறாராம்.



## பிக் பாஸ் சீசன் 5ல் கலந்து கொள்ளும் போட்டியாளர்கள் இவர் தான்? வெளியான லிஸ்ட் விவரம்

பிக் பாஸ் சீசன் 4 கடந்த ஜனவரி மாதம் முடிவடைந்த நிலையில் உடனடியாக பிக் பாஸ் சீசன் 5 எப்போது துவங்கும் என்று ரசிகர்கள் கேட்டு வருகின்றனர்.

அதே போல் பிக் பாஸ் சீசன் 4 போல் இல்லாமல், கொஞ்சம் விறுவிறுப்பும், கொஞ்சம் நகைச்சுவை கலந்த பொழுதுபோக்கு அம்சங்கள் இருக்க வேண்டும் என்று ரசிகர்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

இந்நிலையில் பிக் பாஸ் சீசன் 5ல் கலந்து கொள்ள போகும் போட்டியாளர்கள் குறித்து பட்டியல் ஒன்று சமூக வலைத்தளத்தில் பரவி வருகிறது.




**போட்டியாளர்களின் பட்டியல் :**

**சூப்பர் சிங்கர் ஷிவாங்கி**

**குக் வித் கோமாளி புகழ், அஸ்வின்**

**நடிகர் ராதாரவி**

**பழகருப்பையா**

**லட்சுமி ராமகிருஷ்ணன்**

**பாண்டியன் ஸ்டோர்ஸ் நடிகை ஹேமா**

**ஸ்ரீ ரெட்டி**

**சோனா**

என இவர்களின் பெயர்கள் பிக் பாஸ் சீசன் 5ன் போட்டியாளர்களின் பட்டியலில் பேசப்படுகிறது என்று தகவல் கூறப்படுகிறது.

## TRPயில் அடித்து தூக்கிய பாரதி கண்ணம்மா சீரியல்

விஜய் தொலைக்காட்சியில் சில புதுமுகங்கள் வைத்து தொடங்கப்பட்டது பாரதி கண்ணம்மா சீரியல்.

இந்த சீரியல் ஆரம்பத்தில் வரவேற்பு பெறவில்லை என்றாலும் இப்போது ஹிட்டாக ஓடுகிறது.

கடந்த வாரம் தமிழில் ஒளிபரப்பான சீரியல்களில் பாரதி கண்ணம்மா முதல் இடத்தை பிடித்தது.

இந்த வாரமும் தொலைக்காட்சிகளில் முதல் 5 இடத்தில் இருக்கும் நிகழ்ச்சிகள் குறித்து தகவல் வந்துள்ளது.

முதல் இடத்தை பாரதி கண்ணம்மா சீரியல் பிடித்துள்ளது. அடுத்து ரோஜா, வானத்தைப் போல, பாண்டியன் ஸ்டோர்ஸ் சீரியல்கள் இடம் பிடித்துள்ளன.

இதோ அதன் முழு விவரங்கள்,

| Rank | Channel Name | Programme | This Week |
|---|---|---|---|
| 1 | STAR Vijay | BHARATHI KANNAMMA | 9534 |
| 2 | Sun TV | TFF-NAMMA VEETTU PILLAI | 8698 |
| 3 | Sun TV | ROJA | 8236 |
| 4 | Sun TV | VANATHAI POLA | 8133 |
| 5 | STAR Vijay | PANDIAN STORES/ BHAGYALAKSHMI MEGA SANGAMAM | 7315 |

Cine ulagam

## நடிகைகளை மிஞ்சிய குக் வித் கோமாளி ஷிவாங்கி

சூப்பர் சிங்கர் நிகழ்ச்சி மூலம் சின்னத்திரை ரசிகர்கள் மத்தியில் அறிமுகமானவர் பாடகி ஷிவாங்கி.



சூப்பர் சிங்கர் நிகழ்ச்சியில் போட்டியாளராக அறிமுகமாகி இருந்தாலும், குக் வித் கோமாளி நிகழ்ச்சியின் மூலம் தான் இவருக்கென்று தனி ரசிகர்கள் பட்டாளம் உருவாக துவங்கியது.

அதனை தொடர்ந்து தற்போது குக் வித் கோமாளி சீசன் 2விழும் கோமாளியாக கலக்கி வருகிறார் ஷிவாங்கி.

இந்நிலையில் ஷிவாங்கியின் இன்ஸ்டாகிராம் பக்கத்தில் 2 மில்லியன் பாலோவர்ஸ் வந்துள்ளனர்.

ஆம் தற்போது பல நடிகைகளின் இன்ஸ்டாகிராம் பக்கத்தில் கூட இல்லாத அளவிற்கு ஷிவாங்கியின் இன்ஸ்டா பக்கத்தில் 20 லட்சம் பாலோவர்ஸ் வந்துள்ளது.

மேலும் தற்போது சிவகார்த்திகேயன் நடித்து வரும் டான் திரைப்படத்தில் ஷிவாங்கி நடித்து வருவது குறிப்பிடத்தக்கது.

**தொகுப்பு :– ஹாசினி**




# சருமத்திற்கு பொலிவான தோற்றத்தை தர உதவும் குறிப்புக்கள் !!

உருளைக்கிழங்கில் ப்ளீச்சிங் பண்புகள் உள்ளன. இது சருமத்தில் உள்ள அதிகப்படியான நிறமிகளை நீக்க உதவும். இந்த வழி சென்சிடிவ் சருமத்தினருக்கும் மிகவும் நல்லது.



அதற்கு உருளைக்கிழங்கை துண்டுகளாக்கி அரைத்து சாறு எடுத்து, முகத்தில் மற்றும் வாயைச் சுற்றி 20 நிமிடம் மசாஜ் செய்து, பின் நீரால் கழுவ வேண்டும்.

கடலை மாவுடன், சருமத்தில் உள்ள கருமையைப் போக்க உதவும் மஞ்சளை சேர்த்துப் பயன்படுத்தினால், நல்ல பலன் கிடைக்கும்.

அதற்கு ஒரு பௌலில் 2 டேபிள் ஸ்பூன் கடலை மாவை எடுத்து, அதில் அரை டீஸ்பூன் மஞ்சள் தூள் மற்றும் சிறிது பால் அல்லது நீர் ஊற்றி பேஸ்ட் செய்து கொள்ளவும். பின் அந்த கலவையை வாயைச் சுற்றி தடவி 15 நிமிடங்கள் ஊறவைக்கவும். பின் குளிர்ந்த நீரால் கழுவ வேண்டும்.

ஓட்ஸ் ஒரு அற்புதமான உணவுப் பொருள் மட்டுமின்றி, அழகு பராமரிப்பு பொருளும் கூட. இது சருமத்தில் உள்ள இறந்த செல்களை நீக்கி, சருமத்திற்கு பொலிவான தோற்றத்தைத் தர உதவும்.

அதற்கு சிறிது ஓட்ஸ் பொடியுடன், ஆலிவ் ஆயில் மற்றும் ஆரஞ்சு ஜூஸ் சேர்த்து பேஸ்ட் செய்து, முகத்தில் தடவி மென்மையாக தேய்க்க வேண்டும். பின் குளிர்ந்த நீரால் முகத்தைக் கழுவ வேண்டும். இப்படி தினமும் செய்து வந்தால், விரைவில் ஒரு நல்ல மாற்றத்தைக் காணலாம்.

பப்பாளியில் ப்ளீச்சிங் பண்புகள் உள்ளன. இது சருமத்தில் உள்ள கருமையைப் போக்க உதவி புரியும். ஆகவே உங்கள் வாயைச் சுற்றி கருமையாக இருந்தால், நன்கு கனிந்த பப்பாளியை மசித்து, அத்துடன் சிறிது எலுமிச்சை சாற்றினை சேர்த்து கலந்து, கருமையாக இருக்கும் வாய் பகுதியைச் சுற்றி தடவி, 30 நிமிடங்கள் ஊற வைத்து, பின் கழுவ வேண்டும்.

# பலவித நோய்களை குணப்படுத்தும் பொன்னாங்காணி கீரை !!

கீரைகளின் ராஜா என்று அழைக்கப்படும் பொன்னாங்காணிக் கீரை பலவித நோய்களை குணப்படுத்த உதவும் அற்புத உணவாகவும் மூலிகையாகவும் திகழ்கிறது.

கீரையை சமைத்து சாப்பிடுவதன் மூலம் உடலுக்கு தேவையான சத்துகள் கிடைப்பதுடன் பல நோய்களைக் குணப்படுத்தவும் முடியும். பொன்னாங்காணிக் கீரை காச நோய், இருமல், கண்நோய்கள், வெப்ப நோய்கள், வாத நோய்கள் போன்றவற்றை குணமாக்கக் கூடிய சிறந்த உணவாகும்



பொன்னாங்காணி கீரையுடன் மிளகும், உப்பும் சேர்த்து சாப்பிட்டு வந்தால் உடல் எடை குறையும். இது உடல் எடையை குறைக்க மட்டுமில்லாமல் அதிகரிக்கவும் உதவுகிறது. பொன்னாங்கண்ணி கீரையில் துவரம் பருப்பு, நெய் சேர்த்து சாப்பிட்டால் உடல் எடை அதிகரிக்கும், எலும்புகள் உறுதியாகி உடல் வலிமை பெறும்.

பொன்னாங்காணி கீரையை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் வாயில் இருந்து வரும் துர்நாற்றம் நீங்கும். செல்போன், கணினி பார்ப்பவர்கள், இரவில் சரியாக தூக்கம் வராதவர்கள் பொன்னாங்காணி கீரையை பொறியல் செய்து சாப்பிட்டு வந்தால் கண் சிவத்தல் நீங்கி நன்றாகப் தூக்கம் வரும்.

பொன்னாங்காணி கீரையை கழுவி, சிறு துண்டுகளாக நறுக்கி, அதனுடன் பாசிப்பருப்பு, சின்ன வெங்காயம், சீரகம், பூண்டு, மிளகுத் தூள் சேர்த்து வேகவைத்து சமையல் செய்து சாப்பிட்டால் இரத்தம் சுத்தமாகும்.

பொன்னாங்காணி கீரையை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் கண் பார்வை தெளிவாக தெரியும். பொன்னாங்காணி கீரையை சாப்பிடுவதால் இதயம் மற்றும் மூளை புத்துணர்வு பெற்று சுறுசுறுப்பாக செயல்பட உதவும். மேலும் மூலநோய் மற்றும் மண்ணீரல் நோய்யை குணப்படுத்த உதவுகிறது.

# முடி உதிர்வதை தடுக்க உதவும் ஒலிவ் ஓயில் சிகிச்சைகள் !!

கூந்தல் அடர்த்தியாகவும் வளரும். செம்பட்டை முடி இருப்பவர்களுக்கு ஒலிவ் எண்ணெய்யைப் பயன்படுத்தி மசாஜ் செய்து வந்தால் நல்ல பலன் கிடைக்கும். தலைக்கு தேய்க்க சிறந்த எண்ணெய் ஒலிவ் எண்ணெய் தான்.

தினமும் இரவில் புருவங்களில் ஒலிவ் எண்ணெய்யை தடவிக் கொண்டு படுத்தால் புருவங்கள் மிருதுவாகவும் வசீகரமாகவும் இருக்கும். ஒலிவ் ஓயிலை தினமும் இரவில் படுக்கும் முன் முகத்தில் தடவி படுத்தால் முகத்தில் இருக்கும் அழுக்குகள் வெளிவருவதோடு, வயதான தோற்றத்தையும் கட்டுப்படுத்தும். மேலும் இதை உதடுகளில் தடவினால், உதட்டில் வெடிப்பு ஏற்படாமல், மென்மையாக, பிங்க் நிறத்தில் மாறும்.



குளிப்பதற்கு முன் முகத்தில் ஒலிவ் ஓயிலுடன், சிறிது வினிகரை கலந்து தடவி ஊற வைத்து பின் வெதுவெதுப்பான தண்ணீரில் குளித்தால் சூரியக் கதிரினால் சருமம் பாதிப்படைவதைத் தடுக்கலாம். ஒலிவ் எண்ணெய்யை தொடர்ந்து பூசிவந்தால் என்றும் இளமையோடு இருக்கலாம்.

உண்ணும் உணவில் பயன்படுத்தும் சாதாரண எண்ணெய்க்கு பதிலாக ஆலிவ் ஆயிலை பயன்படுத்த வேண்டும். இதனால் சருமமானது பளபளப்புடன் மிருதுவாக இருக்கும். மேலும் இது சுருக்கங்கள் வராமல் தடுக்கும். ஒலிவ் ஓயில் உடலுக்கு சிறந்த அழகைத் தரக்கூடிய ஒரு அழகு சாதனப்பொருள் மற்றும் மருத்துவ குணம் வாய்ந்த பொருள்.

முடி உதிர்வதை தடுக்க ஓயில் மஸாஜ் தான் சிறந்தவழி. அதற்கு ஒலிவ் எண்ணெயயை லேசாக சூடுபடுத்தி தலையில் பூசி விரல் நுணியில் தலை முழுவதும் மசாஜ் செய்ய வேண்டும். தலையில் எண்ணெய்யை பூசும் போது அதன் மயிற்கால்களில் படும்படி பூசினால் போதும் அழுத்தி தேய்க்ககூடாது. வாரம் இரு முறை தேய்த்து குளித்து வந்தால் பொடுகு தொல்லை நீங்கி, முடிகொட்டுவதும் நின்று விடும்.



காண முடியாத
தூரத்தில் தான்
நீ
இருப்பினும் காணும்
இடமெல்லாம் உன்
முகம் தான்!!!

உணரவே முடியாத
சந்தோஷத்தை தந்தவளும்
நீ தான்
தாங்கிக்கொள்ள முடியாத
வலியை உணர்த்தி
சென்றவளும் நீதான்!!!



**தொகுப்பு :- ஹாசினி**

# கௌரவப்பிச்சை

நேற்றுநடந்தசிலசம்பவங்கள்மனதைக் குடைய உடைந்து போனவராய் திண்ணையில் அமர்ந்திருந்தார் கந்தையர்.

"அப்பா"என்ற குரலுடன் திலகா கையில் தேநீர் கோப்பையுடன் வந்தாள். "அப்பா இந்தாங்கோ இத குடியுங்கோ " என்ற அவள் தேனீர் கோப்பையை அவர் அருகில் வைத்தாள்.
அவரின் வாடிய முகத்தை கண்டு "என்ன அப்பா நீங்க இன்னும் அத மறக்கேலையோ? "என்றபடி வீட்டினுள் நுழைந்தாள். நேற்றைய சம்பவம் அவளுக்கும் கவலையாக இருந்தாலும் அது ஒன்றும் அவளுக்கு புதிதல்ல .

கந்தையர் நினைவுகள் ஒரு புள்ளியில் சங்கமிக்க நேற்று நடந்தவை நினைவுக்கு வந்தன . வழமைபோல அன்றும் திலகாவை பெண் பார்க்க மாப்பிள்ளை வீட்டார் வந்திருந்தனர். பத்து பொருத்தங்களும் பக்காவாய் பொருந்தியிருந்தன. மாப்பிள்ளை அரசாங்க உத்தியோகஸ்தர் . மாதமானால் கை நிறைய சம்பளம் வாங்குகிறவர் . திலகாவின் விண்மீன் வெட்கிடும் அழுகுக்கு இணையாக வரும் கூட. அவளுக்கும் கந்தையருக்கும் மாப்பிள்ளை ரூபனை நன்கு பிடித்து விட்டது.

தரகர் தேநீர் குடித்த படியே " என்ன மாப்பிளைக்கு பொண்ண பிடிச்சிருக்கோ " என்று கேட்க, ரூபனின் வாயில் வார்த்தை முட்டி மோதி " சம்மதம் " என வருமுன் ரூபனின் தாயின் வார்த்தைகள் அவனின் வார்த்தைகளைக்கத்தரித்தன. "மாப்பிளைக்கு பொண்ணை பிடிக்கிறது இருக்கட்டும், முதல்ல பொண்ணுக்கு எவ்வளவு சீதனம் தருவியள்? அத முதல்ல சொல்லுங்கோ " என்றாள்.

சிரித்த படியே தரகர் "கந்தையனுக்கு மிச்சம் இருக்கிறது இந்த பொம்புள பிள்ளை ஒண்டுதான். அவன் அவனால முடிஞ்ச எல்லாம் தருவான் " என்றார் . கந்தையனும் சிரித்தபடி" ஓம் ஓம்" என்று தலையசைத்தார்.

மீண்டும் ஊசியை காதில் நுழைப்பது போல் "இப்படி மொட்டயா சொல்லாம வடிவா எவ்வளவு தருவியள் எண்டு சொல்லுங்கோ" என்றாள்.

கந்தையர் "எவ்வளவு எதிர் பாக்கிறியள் "என்றதும் .மூச்சிடை இடைவெளி கூட இன்றி "பெருசா ஒண்டும் எதிர் பாக்கல மாப்பிளைக்கு ஒரு வீடு வளவு . வேலைக்கு போக ஒரு மோட்டார் சைக்கிள் . முப்பது பவுன் நகை . ஐம்பது லட்சம் ரொக்கமா மட்டும் குடுத்தா போதும் "

ஏதோ ஒன்றை சாதித்ததை போல் ஆண் பிள்ளையைப் பெற்ற கர்வத்துடன் ரூபனின் தாய் அமர்ந்திருந்தாள்

பாவம் கந்தப்புவின் வசதிக்கு மிஞ்சின வரதட்சனை.

என்ன செய்வதென்று தெரியாமல் பெண்ணைப்பெற்ற பாவத்திற்காய் மண்ணைப் பார்த்துக் கண்ணீர் விட்டவராய் அவள் முன் குறுகி நின்றார்.

திருமணம் என்பது வியாபாரமாகிப்போக ஒன்றைக் கொடுத்து இன்னொன்றைப் பெறுதல் எனும் நிலை வியாபாரத்தில் மாறி ஆண் பொருளாகவும் பெண்ணிடம் தன்னை விற்க தானே விலை பேசும் நிலை. அவன் சொல்லும் விலை குறைத்தால் அந்தப்பெண் வாங்க முடியாமலே போய்விடுகிறது. தன்னை தானே விற்கும் நிலை கௌரவப்பிச்சையாய் சீதனமாய் சொல்லப்படுகிறது. இப்படி நடக்க வேண்டுமா ஒரு மண முடிச்சு என் மார் மேல் சீராட்டிய மகளுக்கு ?
இந்தக்காலத்திலயும் இது மாறுதில்ல என மனசுக்குள் தனக்குத்தானே சொல்லி நொந்துகொண்டார்.
எதையும் வெளிப்படுத்த முடியாதவராய் சபை முன் மௌனியாய் கந்தையா நின்றார் .

பிச்சை எடுப்பவன் முன் பிச்சை போடுபவன் தலைகுனியும் இடமாய்...



கந்தையரின் நிலை உணர்ந்த தரகர் "என்ன இவ்வளவு கேக்கிறியள் இது கந்தையரின் சக்திக்கு மிஞ்சினது கொஞ்சம் குறைக்கலாம் தானே " என்றார்.

"அதெப்பிடி என்ர மகன் அரசாங்க வேல செய்யிறான் . இதுக்கு மேல குறைச்சு வரதட்சன வாங்கினா நாளைக்கு சொந்த பந்தத்தில ஒருத்தரும் மதிக்கமாட்டினம் ".என்றவாறே எழுந்தாள்.

"இங்க பாருங்கோ இதுக்கு சம்மதம் என்டா போன் எடுங்கோ, யோசிச்சு அடுத்த முகூர்த்தத்தில நிச்சயம் பண்ணலாம் நாங்கள் போட்டு வாறம்" என்ற படி எழுந்து நடந்தாள் ரூபனின் தாய். பாவம் கந்தையர் .பெண்ணை பெற்ற பாவத்திற்கு மண்ணை பார்த்து கண்ணீர் மட்டுமே விட முடிந்தது .

வரதட்சனை பல முதிர் கன்னிகளை பிரசவிக்கிறது..!

**புவனேஸ்வரன் தர்சிகன்**

**02ஆம் பக்க தொடர்ச்சி...**

சக்தி (வனப் பிரிவு ஒரின்கிணைப்பாளர்)
சத்யன் ( வளப் பாதுகாப்பாளர்)
செல்வராசா (யாழ் மாவட்ட தளபதி )
சிலம்பன் (ராதா விமான எதிர்ப்பு பொறுப்பாளர்)
சின்னவன் (புலனாய்வு)
சித்திரங்கன் (மணலாறு மாவட்டத்துக்கான தளபதி)
Lt.Col.சுடரவன் (இராணுவ புலனாய்வு)
Lt.Col.தணிகையரசு (இம்ரான் பாண்டியன் படைப் பிரிவு)
திலக் (திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி செயலக பொறுப்பாளர்)
திலகர் (நிதிப் பிரிவு.விவசாயம். பண்ணைகளை கவனித்து வந்தார் )
துவாரகன் வயிரவமூர்த்தி (மாவீரர் துயிலும் இல்லம் மன்னார்)
வாகிசன் (ராமநாதன் நிமலநாதன்) ( செயற்பாடு தெரியாது)
வீரதேவன் (மகாலிங்கம் ஜெயகாந்தன்) (வங்கிகள் பொறுப்பாளர்)
Lt.Col.வைதி (இராணுவ புலனாய்வு)
Lt.Col.வள்ளுவன் மாஸ்டர் (ராதா விமான எதிர்ப்பு பிரிவு)
வேலவன் (சிரேஷ்ட தளபதி, இம்ரான் பாண்டியன் படை அணி)
வேல்மாறன் (கேணல் பிரபாவின் பாதுகாப்பாளர்)
வினிதா (நடேசனின் மனைவி )
வீமன் (கட்டளை தளபதி)
விபுலேந்திரன் (நிதிப் பிரிவு)
யோகன் ஃ சேமணன் (அரசியல் துறை)
யோகி (முரண்பாட்டு ஆய்வு நிறுவன பொறுப்பாளர்)

இவர்களோடு சேர்ந்து 1 இலட்சத்து 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் சரணடைந்திருந்தார்கள். இவர்கள் மக்களோடு சேர்ந்து காணாமல் ஆக்கப்பட்டார்களா? அல்லது படுகொலை செய்யப்பட்டார்களா? என்னும் விபரம் இன்னும் கிடைக்கவில்லை. ஆனால் நாட்டின் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தில் தலையிட்டு அதற்கான விவகாரத்திற்கு தீர்வு பெற்றுத்தருவதாக தெரிவித்திருக்கிறார். மக்களை கடத்தி காணாமல் ஆக்கப்பட்ட தரப்பிடமே நீதி நிலை நிற்பது என்பது வேடிக்கையான ஒரு விடயமாகும். இனப்படுகொலை ஆட்கடத்தல் அத்தனையும் இந்த நாட்டில் இடம்பெற்றும் 11 ஆண்டுகளை கடந்த நிலையிலும் தமிழ் மக்களுக்கான தீர்வு எட்டப்படாத ஒரு நிலைப்பாட்டிலேயே இன்றைய அரசியல் பயணம் தொடர்கின்றது. தமிழ் மக்களுக்காக பயணிக்கின்ற த.தே.கூட்டமைப்பு தனது கட்சியின் இருப்பை தக்கவைப்பதற்காக பல்வேறு மாற்றங்களை முற்கொண்டுவருகிறது. கட்சிகள் தொடர்ந்தும் பிளவு பட்டுக்கொண்டே இருக்கின்றன. சரியான தலைமைத்துவம் வழிநடத்தல்கள் இல்லை என்பது பலரது நிலைப்பாடே.

ஆகவே ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி வழங்கப்பட வேண்டும் 80 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விதவைகள் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அங்கவீனர்கள் ஆயிரக்கணக்கானோர் மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் இருக்கிறார்கள். இதைவிடவும் முன்னாள் போராளிகள் சமுதாயத்தில் வேலை வாய்ப்பின்றி பெரிதும் கஷ்டப்படுகின்றனர். இவர்கள் சாதாரண தரமோ உயர் தரமோ படிக்காத நிலையில் சமுதாயத்தில் இவர்களுக்கான வேலை வாய்ப்பு மிக குறைவாகவே இருக்கிறது. தனியார் கம்பனிகள் உருவாக்கப்பட்டு இவர்களுக்கான வேலை வாய்ப்பையும் வழங்கும் நடவடிக்கைகளை உருவாக்க வேண்டும். வெள்ளைக்கொடியுடன் சரணடைந்தவர்கள் சர்வதேச நாட்டின் அனுமதியுடனேயே சரணடைந்தனர். சரணடைந்தவர்கள் தொடர்பில் புதிய தீர்ப்பு வழங்காவிட்டால் மீண்டும் தமிழ் மக்கள் தமது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள நேரிடும். ஆகவே காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் அரசாங்கம் புதிய கவனம் செலுத்த வேண்டும் என்பதையே நாம் கூறி நிற்கின்றோம்.

# ஒரு இலட்சம் காணித் திட்டம் - நிலப்பறிப்பின் இன்னொரு வியூகம்!

பொலன்னறுவை மாவட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லையில் மாதுறு ஓயா குடியேற்றத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போது அப்பிரதேசத்தின் அமைவிடம் காரணமாக பல சிங்கள மக்கள் அங்கு குடியேறத் தயங்கினர். அப்போது ஜனாதிபதியாகப் பதவி வகித்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன நாம் எல்லைகளை நோக்கி நகர மறுத்தால் எல்லைகள் எங்களை நோக்கி நகர்ந்து வந்துவிடும் எனப் பகிரங்கமாக எச்சரித்தார். அந்த அறைகூவல் ஏராளமான சிங்கள மக்களை அங்கு குடியேற வைத்ததுடன் காலப்போக்கில் பிரதேசத்தின் தற்போது மேய்ச்சல் தரவைகளை ஆக்கிரமிக்கும் நிலையும் உருவாகி விட்டது.

அன்று ஜே.ஆர்.ஜெயவர்த்தன விடுத்த எல்லைகள் நகரும் பிரச்சினையை தமிழ் மக்கள் கவனத்தில் கொள்ளவேண்டிய அவசியத் தேவை தற்போது எழுந்துள்ளது. இலங்கையின் அரசியல் வரலாற்றில் குடியேற்றங்கள் மூலம் தமிழ் பிரதேசங்களை அபகரிப்பதை விவசாய அபிவிருத்தி என்ற பெயரில் தொடக்கி வைத்து வெற்றி மேல் வெற்றி பெற்றவர் இலங்கையின் முதலாவது பிரதமர் டி.எஸ்.சேனநாயக்க. அதைத் தொடர்ந்து பல்வேறு சிங்களத் தலைவர்களும் அதைத் தொடர்ந்தாலும் தீவிரமாக அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் சென்றவர்கள் ஜே.ஆர்.ஜெயவர்த்தன, காமினி திசநாயக்க கூட்டு என்றால் மிகையாகாது.

அதேபோன்று தமிழர் தாயகத்தைத் தற்சமயம் சிங்கள மயப்படுத்தும் கைங்கரியத்தைத் தீவிரமாக முன்னெடுப்பது ராஜபக்ஷ சகோதரர்களின் ஆட்சியாகும். அவர்கள் நிலப்பறிப்பை விவசாய அபிவிருத்தி என்ற பேரில் மேற்கொண்டனர். ஆனால் ராஜபக்ஷ சகோதரர்களோ குடியேற்றம் என்ற தமிழ் மக்களை அச்சுறுத்தும் பெயரைக் கைவிட்டு கிராம அபிவிருத்தித் திட்டம் என்ற பதாகையுடன் களமிறங்கியுள்ளனர்.

அதாவது கிராமிய விவசாய அபிவிருத்தித் திட்டம் என்ற பேரில் ஒரு இலட்சம் பேருக்குக் காணிகள் வழங்க விண்ணப்பங்கள் கோரப்பட்டன. போதிய விளம்பரமோ கால அவகாசமோ வழங்கப்படாத நிலையில் தமிழ் மக்களிடமிருந்து ஐம்பதினாயிரம் விண்ணப்பங்கள் மட்டுமே கிடைத்துள்ளதாக அறிய முடிகிறது.

முதலாவது, இவ்விண்ணப்பதாரிகளுக்கான தகுதிகள் பற்றி இதுவரை தெளிவான விபரங்கள் இல்லாத நிலையில் விண்ணப்பிக்கும் பல தமிழ் விண்ணப்பதாரிகளில் எத்தனை பேர் தெரிவு செய்யப்படுவார்கள் என்பதற்கான உத்தரவாதம் எதுவும் இல்லை. எனவே ஒரு இலட்சம் பேரில் தெரிவு செய்யப்படும் தமிழர்களைவிட மிகுதியான பெருந்தொகை சிங்களவர்களாலேயே நிரப்படும் என்பதை நம்பலாம்.

இரண்டாவது, இக்காணிகள் எங்கெங்கு வழங்கப்படும் என்பதோ, எந்தெந்தப் பிரதேசங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன என்பது பற்றியோ எவ்வித வரையறையும்இல்லை. எனவேதமிழ்மக்கள் குடியேறப் பொருத்தமற்றவையானவையும் பாதுகாப்பற்றதுமான பிரதேசங்களில் குடியேற்றப்படும் சாத்தியமும் உண்டு. அதன் காரணமாக அங்கு குடியேறும் தமிழர்கள் தாமாகவே வெளியேறும் நிலைமை உருவாக்கப்படலாம்.

மூன்றாவது, ஒரு குடியேற்றத்தில் சிங்களவர்களும் தமிழர்களும் குடியேற்றப்படும் போது சில முரண்பாடுகள் உருவாகுவதற்கான அல்லது உருவாக்கப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் உண்டு. குறிப்பாக நீர்ப்பற்றாக்குறை ஏற்படும் காலங்களில் நீர்ப்பாசனம் தொடர்பான பிரச்சினைகள் காரணமாக தனி நபர்களுக்கிடையே ஏற்படும் முரண்பாடுகள் கூட இன அடிப்படையில் நோக்கப்பட்டு முறுகல் நிலை தோற்றுவிக்கப்படலாம். அது போன்று ஒரு குடியேற்றத்திட்டத்தின் தனிப்பட்ட நபர்களுக்குள் எழும் முரண்பாடுகள் போன்ற விடயங்கள் இன அடிப்படையில் அணுகப்பட அரச அதிகாரிகள், பொலிஸார் சிங்களவர்கள் தரப்புக்கு ஆதரவு வழங்கத் தமிழ் மக்கள் இயல்பாக வாழமுடியாத நிலை ஏற்பட்டு அங்கிருந்து சிறிது சிறிதாக வெளியேறவேண்டிய நிலை ஏற்படுத்தப்படும்.

நான்காவது, நாடு பரந்த அளவில் இனக் கலவரங்கள் உருவாகும்போது கலப்புக் குடியேற்றத்திலுள்ள ஒட்டு மொத்தத் தமிழ் மக்களும் தாக்கப்பட்டும் கொல்லப்பட்டும் சொத்துக்கள் சூரையாடப்பட்டும் பெண்கள் பாலியல் வன்புணர்வுகளுக்கு உட்படுத்தப்பட்டும் கொடுமைகள் கட்டவிழ்த்து விடப்படும். அதனால் அங்கு தமிழர் வாழ முடியாத நிலை ஏற்படும். இன விகிதாசார அடிப்படையிலேயே குடியேற்றங்கள் இடம்பெறுவதால் கலப்புக் குடியேற்றங்களில் சிங்களவர்களே பெரும்பான்மையினராக இருப்பார்கள் என்பதனால் அவ்வாறான கொடுமைகள் சாத்தியமே. உதாரணமாகக் கலப்புக் குடியேற்றமாக உருவாக்கப்பட்ட கல்லோயா திட்டத்திலிருந்து 1956, 1958 காலப்பகுதிகளில் இடம்பெற்ற இனக் கலவரங்களின்போது அங்கிருந்து தமிழர்கள் முற்றாகவே விரட்டியடிக்கப்பட்டு அது தனிச் சிங்களக் குடியேற்றமாக மாற்றப்பட்டது. வவுனியா மாவட்டத்தின் பதவியாக் குடியேற்றத்திற்கும் இக்கதியே இடம்பெற்றது. ஐந்தாவது, இத்தகைய குடியேற்றங்களைச் சுற்றி அரச உதவியுடன் மேற்கொள்ளப்படும் சட்டவிரோதக் குடியேற்றங்களும் காலப்போக்கில் அவை குடியேற்றத்திட்டங்களாக மாற்றப்படுவதுமாகும். வரலாற்றுப் புகழ் பெற்ற சோமாவதி விகாரை திருகோண மலை மாவட்டத்தில் இருந்ததாகக் கூறப்பட்டு அங்கு ஒரு விகாரை அமைக்கப்பட்டு, அதைச் சுற்றிச் சிங்களக் குடும்பங்கள் ஒரு பௌத்த பிக்குவால் குடியேற்றப்பட்டனர். அதேபோன்று பாலம்போட்டாறு, கப்பல்துறை ஆகிய பிரதேசங்களிலுள்ள தமிழ் மக்கள் விரட்டப்பட்டு அங்கு நொச்சியாகம என்ற குடியேற்றத் திட்டம் உருவாக்கப்பட்டது. சோமாவதி விகாரையைச் சுற்றியும் குடியேறியவர்களும் சேருவில என்ற குடியேற்றத்துக்குள் கொண்டு வரப்பட்டனர். இப்போது கிழக்கு மாகாணத்தின் நிலத் தொடர்பு துண்டிக்கப்பட்டு மட்டக்களப்பு, திரு கோணமலை பிரதான வீதியில் சேருவில என்ற ஒரு சிங்கள உதவி அரசாங்க அதிபர் பிரிவும், தேர்தல் தொகுதியும் உருவாக்கப்பட்டன. இது கல்லோயா, எல்லை ஆகிய கலப்பு குடியேற்றத் திட்டங்களின் விரிவாக்கம் என்பது முக்கியமான விடயமாகும். இவ்வாறே வவுனியாவில் பதவியாக் குடியேற்றத்தின் விரிவாக்கமாக பாரம்பரிய மாமடு கிராமத்தில் தொடக்கத்தில் சிங்களவர்கள் அடாத்தாகக் குடியேறினர். பின்பு அது பதவியாவின் கிராமிய விஸ்தரிப்புத் திட்டம் என்ற பேரில் குடியேற்றத்திட்டமாக்கப்பட்டது. சிறிது காலத்திலேயே அப்பகுதியில் பாரம்பரியமாக வாழ்ந்த தமிழ் மக்கள் மாமடுவை விட்டு வெளியேறி விட்டனர்.

இவ்வாறான கலப்புக் குடியேற்றங்களின் வெவ்வேறு வடிவங்கள் மூலம் வவுனியா மாவட்டத்தில் வவுனியா தெற்கு என்ற ஒரு சிங்கள உதவி அரசாங்க அதிபர் பிரிவு உருவாக்கப்பட்டது.

அபகரிக்கப்படும் தமிழர்களின் இதயபூமி மணலாறு. பாரம்பரிய தமிழ் கிராமங்களையும் அடர்ந்த வனம் கொண்ட காடுகளையும் கொண்டதுடன் வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் ஒரு பிரதேசமாகும். அதன் காரணமாகவே மணலாறு தமிழர் தாயகத்தின் இதயபூமி என அழைக்கப்படுகிறது.



அப்பிரதேசம் தென்னைமரவாடி என்ற வன்னிமையின் கட்டுப்பாட்டின் கீழ் ஏராளமான தனித்தனிக்குளங்களைக் கொண்ட கிராமங்களைக் கொண்டிருந்தது. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் காலத்திலும் இப்பிரதேசம் சுதந்திரபூமியாக விளங்கி வந்தமை தெரியவந்துள்ளது. பின்னாட்களில் இப்பிரதேசம் நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்டிருந்தது.

1965 - 1970 காலப்பகுதியில் அப்பகுதியில் தலா ஆயிரம் ஏக்கர் பரப்பளவு கொண்ட 12 காணிகள் விவசாயப் பண்ணைகள் அமைப்பதற்கென 99 வருடக் குத்தகையில் பெரும் தமிழ் வர்த்தகர்களுக்கு வழங்கப்பட்டன. அங்கு ஏராளமான மலையக மக்கள் பணி புரிவதற்காக அப்பண்ணைகளில் குடியேற்றப்பட்டனர். 1983ல் கென்ற் பண்ணை, டொலர் பண்ணை ஆகிய இரு பண்ணைகளும் சுவீகரிக்கப்பட்டு சிறைச்சாலைத் திணைக்களத்துக்கு ஒப்படைக்கப்பட்டன. அங்கு ஒரு திறந்தவெளிச் சிறைச்சாலை அமைக்கப்பட்டதுடன் கைதிகளின் குடும்பங்களும் குடியேற்றப்பட்டன. அங்கு ஏற்கனவே குடியிருந்த மலையக மக்கள் விரட்டியடிக்கப்பட்டனர். 1984ல் மணலாற்றுப் பகுதி மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு பண்ணைகளில் வசித்த மக்கள் மட்டுமின்றி, பாரம்பரிய தமிழ் கிராமங்களில் வசித்த மக்களும் 48 மணி நேரத்தில் வெளியேற்றப்பட்டனர். போர் முடிவுக்கு வந்தபோது இந்த வளமான கிராமங்கள் பல சிங்களவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டது மட்டுமின்றி மகாவலி அபிவிருத்தி சபையால் அவர்களுக்கு அனுமதிப் பத்திரமும் வழங்கப்பட்டது.

ஏற்கனவே மணலாற்றின் பல பகுதிகள் ஆக்கிரமிக்கப்பட்ட நிலையில் கிராமியப் பொருளாதார அபிவிருத்தித் திட்டத்திற்கும், மணலாற்றுக்கும் என்ன சம்பந்தம் என்ற கேள்வி எழலாம். ஏற்கனவே கல்லோயா, கந்தளாய், முதலிக்குளம், பதவியா போன்ற பகுதிகளில் தமிழ் மக்கள் சந்தித்த அனுபவங்களும் தமிழர் தாயகப் பகுதிகளில் அம்பாறை, சேருவில, வவுனியா தெற்கு தனிச் சிங்களப் பிரதேசங்கள் உருவாக்கப்பட்டமையும் அரசாங்கம் கண் வைப்பதன் உள்நோக்கத்தையும் நீண்ட கால இலக்கையும் புரிந்து கொள்ள வைக்கின்றன.

கிராமியப் பொருளாதார அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தற்போது எஞ்சியுள்ள பகுதிகளில் தமிழ் மக்கள் குடியேற்றப்படும் சாத்தியம் உண்டு. அப்படியான நிலையில் அங்கு சட்ட விரோதமாகவும் மகாவலி அபிவிருத்தி சபையாலும் குடியேற்றப்பட்டவர்களுக்கும் காணி உறுதிகள் வழங்கப்பட்டு அவர்களின் காணி உரிமை உறுதிப்படுத்தப்படும். எனவே தமிழ் மக்களின் இதயபூமியான மணலாறு என்ற பரந்த பிரதேசம் கலப்பு குடியேற்றமாகும்.

தற்சமயம் இது முல்லை மாவட்டத்தில்ஒரு தனியான உதவி அரசாங்க அதிபர் பிரிவாக்கப்பட்டுள்ளது. விரைவில் இனமோதல்கள், இராணுவ நடவடிக்கைகள், அரச அதிகாரிகளின் பாரபட்சமான நடவடிக்கைகள் என்பன காரணமாக தமிழ் மக்கள் விரைவில் வெளியேறும் நிலை உருவாக்கப்படும். அத்துடன் மணலாறு முழுமையாகச் சிங்கள மயப்படுவதுடன் கல்லோயா, பதவியா போன்று விரிவடைந்து அயற் கிராமங்களை ஆக்கிரமிக்கும் நிலையும் ஏற்படும்.

அடிப்படையில் வடக்கில்வெலி ஓயா என்ற ஒரு சிங்கள மாவட்டத்தை உருவாக்குவதன் மூலம் தமிழர் தாயகத்தின் தனித்துவத்தைச் சிதைக்கும் அதேவேளையில் வடக்குக் கிழக்குக்கான நிலத்தொடர்பும் துண்டிக்கப்படும் நிலை ஏற்படலாம். இவற்றின் ஒரு பகுதியாக கற்பூரப்புல்வெளி, முள்ளியவளை தேக்கங்காடு, இரணைமடு, முறிகண்டியில் இராணுவக் குடும்பங்களுக்கான குடியேற்றத்துக்கு ஒதுக்கப்பட்ட 4,000 ஏக்கர், பூனகரி 4ம் கட்டை, முந்திரிகைக்குளம், மெனிக்பாம், மடு றோட் ஆகிய பகுதிகளில் இனவிகிதாசார அடிப்படையிலான குடியேற்றங்கள் என்ற பேரில் சிங்களவர் குடியேற்றப்படுவார்கள் என்பது மறுக்கப்படமுடியாது.

எனவே இந்தக் கிராமிய பொருளாதார அபிவிருத்திட்டம் மூலம் அம்பாறை போன்று, சேருவில போன்று, மொறவெள போன்று, மணலாறு போன்று, பதவியா போன்று தமிழர் நிலங்களை அபகரிப்பதுடன் தமிழர் தாயகத்தின் நிலத்தொடர்பைத் துண்டித்துச் சிதைக்கும் சதியே பிரதான இலக்காக உள்ளடக்கப்பட்டுள்ளது என்பது புரிந்து கொள்ளப்படவேண்டும்.

இதைச் சரியாகப் புரிந்து கொண்டு தமிழ்த் தலைமைகள் நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் கடும் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும். அரசாங்கத்தின் உள்நோக்கங்களை தமிழ் மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தவேண்டும். இத்திட்டங்களில் தமிழர் மட்டுமே குடியேற்றப்படும் நிலை உருவாகும்வரை ஜனநாயகப் போராட்டங்கள் தொடரவேண்டும். அப்படியான ஒரு விழிப்பு நிலை உருவாகாவிட்டால் நாம் பெரும் ஆபத்தை எதிர்கொள்வது தவிர்க்கமுடியாததாகும்.

**சுழியோடி**




## புதிய சுவாரசியமான அம்சத்தை அறிமுகப்படுத்திய Twitter!


பிரபல சமூக ஊடக தளமான ட்விட்டர் வாய்ஸ் நோட் அனுப்பும் அம்சத்தை புதிதாக அறிமுகப்படுத்தியுள்ளது.

ட்விட்டர் சமீபத்தில் வாய்ஸ் நோட் அல்லது வாய்ஸ் மெசேஜ் அனுப்பும் அம்சத்தை DM என அழைக்கப்படும் னுசைநஉவ ஆநளளயபந-களில் சோதிக்கத் தொடங்குவதாக அறிவித்துள்ளது.

இந்தப் புதிய அம்சத்தை இந்தியா, பிரேசில் மற்றும் ஜப்பான் ஆகிய மூன்று நாடுகளில் சோதிக்கப்படுகிறது.

வாய்ஸ் மெசேஜ் அம்சம் இன்னும் சோதனை நிலையில் உள்ளது, எனவே, இது இன்னும் தளத்தின் அனைத்து பயனர்களுக்கும் கிடைக்கவில்லை. இது ட்விட்டரின் சமீபத்திய Update-ன் ஒரு பகுதியாகும்.

இந்தப் புதிய அம்சத்தின் மூலம் ட்விட்டர் பயனர்கள் DM-களில் 140 வினாடிகள் வரை நீளமுள்ள ஆடியோ செய்திகளை தங்கள் நண்பர்கள் மற்றும் அவர்களின் நெட்ஒர்க்கில் உள்ள அனைவருக்கும் அனுப்பலாம்.



## இன்பேஸ் நிறுவனத்தின் புதிய ஸ்மார்ட்வாட்ச் அறிமுகம்

இன்பேஸ்நிறுவனத்தின் புதியஸ்மார்ட்வாட்ச் இந்தியசந்தையில் அறிமுகம்செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த புது ஸ்மார்ட்வாட்ச் அர்பன் LYF எனும் பெயரில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதன் விலை ரூ. 4999 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இது அர்பன் அதிகாரப்பூர்வ வலைதளத்தில் கிடைக்கிறது. இவை ஜெட் பிளாக் கேஸ் மற்றும் மிட்நைட் பிளாக் பேண்ட், சில்வர் கேஸ் மற்றும் பிராஸ்ட் வைட் பேண்ட், ரோஸ் கோல்டு கேஸ் மற்றும் பின்க் சால்மன் பேண்ட் போன்ற நிறங்களில் கிடைக்கிறது. அதுமட்டுமின்றி இந்த ஸ்மார்ட்வாட்ச் மார்ச் 5 ஆம் தேதிக்குள் இந்த ஸ்மார்ட்வாட்ச் வாங்குவோருக்கு ரூ. 1000 தள்ளுபடி வழங்கப்படுகின்றது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்த ஸ்மார்ட்வாட்ச் பல சிறப்பம்சங்களை உள்ளடக்கியுள்ளது.

அர்பன் LYF ஸ்மார்ட்வாட்ச் 1.75 இன்ச் அளவில் 240x240 ரெசல்யூஷன் சதுரங்க வடிவ டச் ஸ்கிரீன் டிஸ்ப்ளே கொண்டிருக்கிறது.

இது ப்ளூடூத் 4 கனெக்டிவிட்டி அம்சம் கொண்டுள்ளது. இதை கொண்டு அழைப்புகளை ஸ்மார்ட்வாட்ச் மூலம் ஏற்க முடியும்.

இந்த ஸ்மார்ட்வாட்ச் IP67 தர வாட்டர் மற்றும் டஸ்ட் ரெசிஸ்டண்ட் வசதி கொண்டிருக்கிறது.

இன் சென்சார்கள் இதய துடிப்பு, இசிஜி, கலோரி, எஸ்பிஓ2, ரத்த அழுத்தம் மற்றும் உறக்கம் பற்றிய விவரங்களை டிராக் செய்யும் வசதி கொண்டிருக்கின்றன.

சமூக வலைதளம், குறுந்தகவல், வானிலை நோட்டிபிகேஷன் மற்றும் கேமரா, மியூசிக் கண்ட்ரோல் போன்ற அம்சங்கள் கொண்டுள்ளது.

அழைப்புகள் இன்றி இந்த ஸ்மார்ட்வாட்ச் 7 நாட்களுக்கு பேக்கப் வழங்கும் வசதி.

அழைப்புகளை பயன்படுத்தும் பட்சத்தில் 2 நாட்களுக்கு பேக்கப் வழங்கும் வசதி.

இதனுடன் வரும் ஸ்டிராப்களை கழற்றி மாற்றிக் கொள்ளும் வசதி உள்ளது.

## புதிய பிரைவசி பாலிசி - விரைவில் அப்டேட் வெளியிடும் வட்ஸ்அப்

வட்ஸ்அப் நிறுவனம் மேம்பட்ட பிரைவசி பாலிசிக்கான அப்டேட்டை விரைவில் வெளியிட இருப்பதாக தெரிவித்து உள்ளது.

வட்ஸ்அப் நிறுவனம் வரும் வாரங்களில் மேம்படுத்தப்பட்ட பிரைவசி பாலிசியை மீண்டும் வெளியிட இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. சில வாரங்களுக்கு முன் வட்ஸ்அப் வெளியிட்ட புது அப்டேட்டிற்கு உலகளாவிய பயனர்கள் பெரும் எதிர்ப்பை தெரிவிதித்தனர்.




பின் புது அப்டேட் பற்றி வட்ஸ்அப் நீண்ட விளக்கம் அளித்தது. மேலும் புதிய மாற்றங்களுக்கு பயனர்கள் ஒப்புதல் வழங்க மே 15, 2021 எனும் புதிய காலக்கெடுவை பிறப்பித்தது. இத்துடன் வட்ஸ்அப் தனது பயனரின் தனிப்பட்ட குறுந்தகவல், குழுக்களில் பகிரப்படும் குறுந்தகவல் உள்ளிட்டவைகளை பார்க்க முடியாது என தெரிவித்தது.

மேலும் பேஸ்புக் நிறுவனம் வாட்ஸ்அப் பிஸ்னஸ் அம்சத்தை கையாண்டு, வியாபாரங்கள் புது சேவைகள் மற்றும் அம்சங்களை இயக்க வழி செய்வதாக வாட்ஸ்அப் தெரிவித்தது. முன்னதாக ஜனவரி மாதத்தில் பயனர்கள் மேம்பட்ட பிரைவசி பாலிசியை ஏற்றுக் கொண்டால் மட்டுமே செயலியை தொடர்ந்து பயன்படுத்த முடியும் என தெரிவித்தது.

இதைத் தொடர்ந்து பலர் வட்ஸ்அப் செயலியை அன்-இன்ஸ்டால் செய்து டெலிகிராம் மற்றும் சிக்னல் போன்ற செயலிகளை பயன்படுத்த துவங்கினர். பின் வட்ஸ்அப் சர்ச்சைக்குள்ளான பிரைவசி பாலிசி பற்றிய விளக்கத்தை உலகம் முழுக்க விளம்பரங்கள் வாயிலாக பயனர்களுக்கு தெரிவித்து வருகிறது.

## பப்ஜி மொபைல் 2 வெளியீட்டு விவரம்

தென் கொரிய நிறுவனம் உருவாக்கி வரும் பப்ஜி மொபைல் 2 கேம் வெளியீட்டு விவரங்களை தொடர்ந்து பார்ப்போம்.

பப்ஜி மொபைல் 2 கேம் அடுத்த வாரம் வெளியாகலாம் என தகவல் வெளியாகி உள்ளது. முன்னதாக சீன நிறுவனம் என்பதால், இந்தியாவில் கடந்த ஆண்டு செப்டம்பர் மாத வாக்கில் பப்ஜி மொபைல் தடை செய்யப்பட்டது. தற்சமயம் பப்ஜி மொபைல் 2 கேம் தென் கொரியாவை சேர்ந்த கிராப்டான் நிறுவனத்தால் உருவாக்கப்பட்டு வருகிறது.


இதுவரை பப்ஜி மொபைல் 2 வெளியீடு பற்றி அதிகாரப்பூர்வமாக எந்த தகவலும் வெளியாகவில்லை. எனினும், இதன் வெளியீடு மட்டுமின்றி இந்த கேம் கதைக்களம் 2051 ஆண்டு நடைபெறுவதை போன்று இருக்கும் என்ற தகவலும் வெளியாகி உள்ளது. மேலும் இதில் பல்வேறு அதிநவீன ஆயுதங்கள், கேட்ஜெட்கள் மற்றும் புதிய மேப் இடம்பெற்று இருக்கும் என கூறப்படுகிறது.

முந்தைய கேம் போன்றே புதிய பப்ஜி மொபைல் 2 வெர்ஷனும் ஆண்ட்ராய்டு மற்றும் ஐஓஎஸ் தளங்களில் வெளியாகும் என கூறப்படுகிறது. இதுபற்றிய அதிகாரப்பூர்வ அறிவிப்பு அடுத்த வாரம் நடைபெற இருக்கும் பப்ஜி குளோபல் இன்விடேஷனல் எஸ் 2021 நிகழ்வில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.




**கணினித் துறை பாரம்பரியத்தை மதிப்பதில்லை. புதுமையை மட்டுமே மதிக்கும் ஒரு துறை எங்கள் கணினித் துறைதான்.சத்யா நாதெள்ளா, தலைவர், மைக்ரோசாப்ட்கணினி துறை பாரம்பரியத்தை மதிப்பதில்லை. புதுமையை மட்டுமே மதிக்கும் ஒரு துறை எங்கள் கணினி துறை தான்.**

**சத்யா நாதெள்ளா**
**தலைவர், மைக்ரோசாப்ட்**



# விளையாட்டு செய்திகள்

## ஸ்ரீலங்கா கிரிக்கெட் அலுவலக உறுப்பினர் தேர்தலில் பத்தரமுல்ல சீலரத்ன தேரர் போட்டி

ஸ்ரீலங்கா கிரிக்கெட் அலுவலக உறுப்பினர்களுக்கான தேர்தலில் போட்டியிடுவதற்காக ஜனசெத பெரமுன கட்சித் தலைவர் வண.பத்தரமுல்ல சீலரத்ன தேரர் வேட்புமனுவை தாக்கல் செய்துள்ளார்.




தேரர் கிரிக்கெட் நிறுவனத்துக்கு சென்று தனது வேட்பு மனுவை வழங்கியதாக ஸ்ரீலங்கா கிரிக்கெட் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

ஸ்ரீலங்கா கிரிக்கெட்டின் உதவித் தலைவர் பதவிக்கு போட்டியிட அவர் வேட்பு மனுவை தாக்கல் செய்துள்ளார்.

சீலரத்ன தேரர் வடக்கு மாகாணத்தில் உள்ள புனித அந்தோனியார் விளையாட்டுக் கழகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இப்பதவிக்கே வேட்பு மனுவை வழங்கியுள்ளதாகத் தெரிகிறது.

## இந்தியக் கிரிக்கெட் வீரர்களான வினய் குமார்– யூசப் பதான் ஓய்வு!

இந்தியக் கிரிக்கெட் அணி வீரர்களான வினய் குமார் மற்றும் யூசப் பதான் ஆகியோர் ஓய்வுப் பெறுவதாக அறிவித்துள்ளனர். இதில் வேகப்பந்து வீச்சாளரான வினய் குமார் சர்வதேச கிரிக்கெட் மற்றும் முதல் தர கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். 37 வயதான இவர் கடந்த 2010ஆம் ஆண்டு மே 11ஆம் திகதி ரி-20 கிரிக்கெட்டில் இந்திய அணிக்காக அறிமுகம் ஆனார்.

மே 28ஆம் திகதி ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் அறிமுகம் ஆனார். கடந்த 2012ஆம் ஆண்டு அவுஸ்ரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் அறிமுகம் ஆனார். இந்த ஒரு டெஸ்ட் போட்டியில் மட்டுமே இந்திய அணிக்காக விளையாடினார்.

இந்த நிலையில் சர்வதேச கிரிக்கெட் மற்றும் முதல்தர கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். வினய் குமார், 31 ஒருநாள் போட்டிகளில் 38 விக்கெட்டுகளும், 9 ரி-20 போட்டிகளில் 10 விக்கெட்டுகளும், 1 டெஸ்ட் விக்கெட்டும் வீழ்த்தியுள்ளார்.

இதேபோல சுழற்பந்து வீச்சு சகலதுறை வீரரான யூசப் பதான், அனைத்து வடிவிலான கிரிக்கெட்டில் இருந்தும் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

38 வயதாகும் யூசப் பதான், 2007ஆம் ஆண்டு ரி-20 போட்டியிலும், 2008ஆம் ஆண்டு ஒருநாள் கிரிக்கெட் போட்டியிலும் இந்திய அணிக்காக அறிமுகம் ஆனார்.

அவர், இந்திய அணிக்காக 57 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 810 ஓட்டங்கள் அடித்துள்ளார். இதில் 2 சதம், 3 அரைசதம் அடங்கும். 33 விக்கெட்டுகள் வீழ்த்தியுள்ளார். 22 ரி-20 போட்டிகளில் விளையாடி 236 ஓட்டங்கள் அடித்துள்ளார். 13 விக்கெட்டுகள் வீழ்த்தியுள்ளார்.

அத்துடன் இரண்டு முறை உலகக் கிண்ணத்தை வென்ற இந்திய அணியில் இடம் பிடித்துள்ளார். 2007ஆம் ஆண்டு ரி-20 உலகக்கிண்ணம் மற்றும் 2011ஆம் ஆண்டு 50ஓவர்கள் கொண்ட உலகக்கிண்ணம் வென்ற அணியில் யூசப் பதான் இடம்பிடித்திருந்தார்.

இதுதவிர ஐ.பி.எல். தொடரில், கொல்கத்தா அணி இரண்டு முறை சம்பியன் பட்டத்தை வெல்லும்போது அந்த அணியில் இருந்தார். அதேபோல் 2008ஆம் ஆண்டு ராஜஸ்தான் றோயல்ஸ் அணி சம்பியன் கிண்ணத்தை வெல்லும்போது அந்த அணியில் இடம் பிடித்திருந்தார்.




## இந்தியக் கிரிக்கெட் அணியின் அஸ்வின் புதிய சாதனை!

இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னணி சுழற்பந்துவீச்சாளரான ரவிச்சந்திரன் அஸ்வின் சாதனை படைத்துள்ளார். இங்கிலாந்து அணிக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இரண்டாவது இன்னிங்ஸில் ஜோஃப்ரா ஆர்ச்சர் விக்கெட்டை வீழ்த்தியதன் மூலம் 400வது விக்கெட்டை வீழ்த்தி சாதனை படைத்துள்ளார்.



400 விக்கெட்டுகள் வீழ்த்திய நான்காவது இந்திய பந்துவீச்சாளர் என்ற பெருமையை பெற்றார் அஸ்வின் உலகளவில் 16ஆவது பந்துவீச்சாளர்என்பெருமையையும்பெற்றார். அத்துடன் 400 டெஸ்ட் விக்கெட்டுகளை மிக வேகமாக வீழ்த்திய பந்துவீச்சாளர் என்ற பெருமையையும் அவர் பெற்றுள்ளார். இந்தியக் கிரிக்கெட்டில் முன்னதாக கபில்தேவ், கும்ப்ளே, ஹர்பஜன் ஆகியோர் 400 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளனர். அஹமதாபாத்- நரேந்திர மோடி விளையாட்டரங்கில் நடைபெற்ற மூன்றாவது டெஸ்டில் இந்தியக் கிரிக்கெட் அணி 10 விக்கெட்டுகளால் அபார வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## இங்கிலாந்து அணிக்கெதிரான மூன்றாவது டெஸ்ட்: இந்தியா 10 விக்கெட்டுகளால் அபார வெற்றி!

இங்கிலாந்து அணிக்கெதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில், இந்தியக் கிரிக்கெட் அணி 10 விக்கெட்டுகளால் அபார வெற்றிபெற்றுள்ளது. இந்த வெற்றியின் மூலம் நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், 2-1 என்ற கணக்கில் இந்தியா முன்னிலைப் பெற்றுள்ளது.

அஹமதாபாத்- நரேந்திர மோடி விளையாட்டரங்கில் ஆரம்பமான இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி, முதல் இன்னிங்ஸிற்காக 112 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, ஸெக் கிரெவ்லி 53 ஓட்டங்களையும் ஜோ ரூட் 17 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். இந்திய அணியின் பந்துவீச்சில், அக்ஸர் பட்டேல் 6 விக்கெட்டுகளையும் அஸ்வின் 3 விக்கெட்டுகளையும் இசாந் சர்மா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்சை தொடங்கிய இந்தியா அணி, 145 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, ரோஹித் சர்மா 66 ஓட்டங்களையும் விராட் கோஹ்லி 27 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். இங்கிலாந்து அணியின் பந்துவீச்சில், ஜோ ரூட் 5 விக்கெட்டுகளையும் ஜெக் லீச் 4 விக்கெட்டுகளையும் ஜொப்ரா ஆர்செர் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.



இதனைத்தொடர்ந்து 33 ஓட்டங்கள் பின்னிலையில், தனது இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணி, 81 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இதனால் இந்தியா அணிக்கு 49 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, பென் ஸ்டோக்ஸ் 27 ஓட்டங்களையும் ஜோ ரூட் 19 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இந்திய அணியின் பந்துவீச்சில், அக்ஸர் பட்டேல் 5 விக்கெட்டுகளையும் அஸ்வின் 4 விக்கெட்டுகளையும் வொஷிங்டன் சுந்தர் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர். இதன்பிறகு 49 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய இந்தியா அணி, எவ்வித விக்கெட் இழப்பின்றி வெற்றி இலக்கை கடந்தது.

இதனால் இந்தியா அணி 10 விக்கெட்டுகளால் அபார வெற்றிபெற்றது. இதன்போது ரோஹித் சர்மா ஆட்டமிழக்காது 25 ஓட்டங்களுடனும் சுப்மான் கில் 15 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, முதல் இன்னிங்ஸில் 6 விக்கெட்டுகள், இரண்டாவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுகள் என மொத்தமாக 11 விக்கெட்டுகளை சாய்த்த அக்ஸர் பட்டேல் தெரிவுசெய்யப்பட்டார். ஆசிய மண்ணில் இரண்டே நாட்களில் ஒரு டெஸ்ட் போட்டி முடிவடைந்த மூன்றாவது சந்தர்ப்பமாக இப்போட்டி பதிவானது. அத்துடன் வெற்றியுடன் பதிவான போட்டி என்பது இதுவே முதல் முறை.

இதனிடையே விராட் கோஹ்லி தலைமையிலான இந்தியா அணி இப்போட்டியில் வெற்றிபெற்றதன் மூலம், டோனியின் சாதனையை முறியடித்தார். முன்னதாக மகேந்திர சிங் டோனி, சொந்த மண்ணில் 30 டெஸ்டுகளில் 21 வெற்றிகளை பதிவு செய்திருந்தார். ஆனால் விராட் கோஹ்லி தற்போது 29 டெஸ்டுகளில் 22 வெற்றிகளை பதிவுசெய்து அந்த சாதனையை முறியடித்தார். இரு அணிகளுக்கிடையிலான நான்காவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி, எதிர்வரும் மார்ச் மாதம் 4ஆம் திகதி அஹமதாபாத்- நரேந்திர மோடி விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

# உலக செய்திகள்

## உலக நாடுகளுக்கு சிவப்பு எச்சரிக்கை

உலக நாடுகள் புவி வெப்பமடைதல் குறித்து சரியான நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் அடுத்த சில ஆண்டுகளில் உலக வெப்பமாதல் மேலும் 1.5 டிகிரி செல்சியஸ் உயரும் என தெரியவந்துள்ளது.

சர்வதேச அமைப்பினால் மேற்கொண்ட ஆய்விலிருந்து இது தெரியவந்துள்ளது.

இந்த சூழ்நிலையை உலகம் எதிர்கொண்டால். அது மோசமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என்று அது எச்சரித்துள்ளது.

எனவே. உலக வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்த உலகெங்கிலும் உள்ள நாடுகள் இனிமேல் தயாராக இருக்க வேண்டும் என்று ஆய்வு சுட்டிக்காட்டுகிறது.

புவி வெப்பமடைதல் குறித்து விடுத்துள்ள எச்சரிக்கை உலகிற்கு பொது சிவப்பு எச்சரிக்கை என ஐ.நா பொதுச்செயலாளர் அன்டோனியோ குடரெஸ் தெரிவித்துள்ளார்.


புவி வெப்பமடைதலைக் கட்டுப்படுத்த உலகெங்கிலும் உள்ள நாடுகள் எடுக்கும் நடவடிக்கைகள் போதுமானதாக இல்லை என்றும் பிரான்ஸ் மாநாடு தெரிவித்துள்ளது.



## பயணித்துகொண்டிருந்த விமானத்தின் சில பாகங்கள் வீடுகளின் மேல் விழுந்த அதிர்ச்சி சம்பவம்- அமெரிக்காவில்

அமெரிக்காவின் டென்வரில் பயணித்துக்கொண்டிருந்த விமானத்தின் சில பாகங்கள் வீடுகளின் மேல் விழுந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. 241 பேருடன் பயணித்துக்கொண்டிருந்த பொயிங் 777 விமானத்தின் பாகங்களே வீடுகளின் மேல் விழுந்துள்ளன.

விமானம் புறப்பட்ட சில நிமிடங்களில் இயந்திரமொன்று இயங்கமறுத்தது எனினும் விமானம் பாதுகாப்பாக எவருக்கும் காயமின்றி தரையிறங்கியுள்ளது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். விமானம்புறப்பட்டவுடன் பாரியசத்தமொன்று கேட்டது என பயணிகள் தெரிவித்துள்ளனர். யுனைட்டட் எயர்லைன்சின் விமானம் புறபட்டவேளை அதன் வலதுபக்க இயந்திரம் இயங்கமறுத்தது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். விமானம் வேகமாக குலுங்கதொடங்கியது தரையை நோக்கி விமானம் சென்றுகொண்டிருந்தது என பயணியொருவர் தெரிவித்துள்ளார். நாங்கள் உயிரிழந்தால் எங்களை அடையாளம் காண்பதற்காக எங்களிடமிருந்து ஆவணங்களை தயாராகவைத்திருந்தோம் என அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை விமானத்தின் பாகங்கள் வீடுகள் மேல் விழுந்தன புரூம்பீல்டை சேர்ந்த ஒருவர் தெரிவித்துள்ளார். அது கீழே விழத்தொடங்கியவேளை நாங்கள் எங்களை பாதுகாத்துக்கொண்டோம் என அவர் குறிப்பிட்டுள்ளார். விமானத்தை நாங்கள் பார்த்தோம்.பாரிய சத்தமொன்று கேட்டது வானில் கரும்புகைமண்டலம் காணப்பட்டது விமானத்தின் பாகங்கள் கீழே விழத்தொடங்கின என மற்றொருவர் தெரிவித்துள்ளார்



## அமெரிக்க தளங்களை இலக்கு வைத்து ஈராக்கில் மீண்டும் ரொக்கட் தாக்குதல்

அமெரிக்காவின் தனியார் பாதுகாப்பு நிறுவனத்தை சேர்ந்தவர்கள் தங்கியிருந்த அமெரிக்க தளமொன்றை இலக்குவைத்து சனிக்கிழமை ரொக்கட் தாக்குதல்கள்இடம்பெற்றதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. சலாஅல்டின் மாகாணத்தில் உள்ள பலாட்விமானதளத்தினை இலக்குவைத்தே இந்த தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. நான்கு ரொக்கட்கள் விமானதளத்திற்குள் விழுந்து வெடித்ததாக தெரிவித்துள்ள ஈராக்கின் பாதுகாப்பு தரப்பினர் ஒருவர் காயமடைந்துள்ளார் எனவும தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க நிறுவனத்தை சேர்ந்த ஒருவரே காயமடைந்துள்ளார் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த தாக்குதலிற்கு எவரும் உரிமை கோரவில்லை. ஒரு வார காலத்தில் அமெரிக்காவின் தனியார் பாதுகாப்பு நிறுவனங்களை சேர்ந்தவர்களை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது தாக்குதல் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. கடந்த வாரம் இடம்பெற்ற தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டிருந்தார். ஈரான் ஆதரவு ஈராக்கிய குழுக்களே இந்த தாக்குதலை மேற்கொள்வதாக சந்தேகங்கள் காணப்படுகின்றன .

## வட கொரியாவில் சுரங்கங்களில் வேலை செய்யும் தென்கொரிய போர் கைதிகள்!



கொரிய போரின் போது சிறைபிடிக்கப்பட்ட தென்கொரிய போர் கைதிகள். வட கொரியாவில் சுரங்கங்களில் வேலை செய்து வருவது வெளிச்சத்துக்கு வந்துள்ளது. வட கொரிய மனித உரிமைகளுக்கான குடிமக்கள் கூட்டமைப்பு சார்பில் வட கொரியாவில் இருந்து ரத்த நிலக்கரி ஏற்றுமதி என்ற தலைப்பில் வெளியான கட்டுரையில் இந்த விடயம் தெரியவந்துள்ளது. வட கொரிய நிலக்கரி சுரங்கங்களில் வேலை பார்த்த 15 பேரின் நேரடி அனுபவங்களின் அடிப்படையில் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

1953ஆம் கொரிய போர் முடிந்தபோது வட கொரியா பிடித்து வைத்திருந்த சுமார் 50 ஆயிரம் தென்கொரிய போர்க் கைதிகளில் ஒருவர் தனது அனுபங்களை பகிர்ந்துக்கொண்ட போது. 'வேலை செய்யும் முகாம்களுக்கு நாங்கள் இழுத்துச் செல்லப்பட்டபோது. துப்பாக்கிமுனையில். எங்களை வரிசையாக அழைத்துச் சென்றார்கள். சுற்றிலும் ஆயுதம் ஏந்திய வீரர்கள் இருந்தனர். சுமார் 670 போர்க் கைதிகளுடன் வடக்கு ஹாம்ஜியோங் மாகாணத்தில் ஒரு சுரங்கத்தில் நாம் வேலை பார்த்தோம். 40 ஆண்டுகள் கழித்து தப்பிச் செல்லும் வரை அங்கு தான் நான் வேலை பார்த்தேன். அடிமைகளாக இருந்த காலத்தில் திருமணம் செய்து. குழந்தைகள் பெற்றுக் கொள்ள ஊக்குவிக்கப்பட்டோம். குறைவான உணவுப் பொருட்களே தந்தனர். அதில் தான் வாழ்க்கையை நடத்தினோம். அந்தப் பிள்ளைகளையும் சுரங்கத்திற்கே அழைத்துச் செல்வதைத் தவிர தங்களுக்கு வேறு வழி தெரியவில்லை' என கூறினார்.

அரசாங்கத்தின் நிலக்கரி சுரங்கங்களில் உள்ளே நடக்கும் விடயங்களை கோடிட்டுக் காட்டுவதாக இந்த அறிக்கை உள்ளது. வட கொரியாவில் இருந்து சில பொருட்களை வெளிநாடுகளுக்குக் கடத்திச் சென்று விற்பதன் மூலம் வெளியில் சொல்ல முடியாத அளவுக்கான தொகையை வருமானமாகப் பெறுவதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு கிடைக்கும் பல நூறு மில்லியன் டொலர்கள் பணம், அரசாங்கத்தின் இரகசிய ஆயுதத் தயாரிப்புத் திட்டங்களுக்கு செலவிடப்படுகிறது என்றும். இந்த கடத்தலில் ஜப்பானிய யக்குஸா உள்ளிட்ட கிரிமினல் குழுக்கள் துணை செய்வதாகவும் அறிக்கை கூறுகிறது.

## அமெரிக்க தளங்களை இலக்கு வைத்து ஈராக்கில் மீண்டும் ரொக்கட் தாக்குதல்

மியன்மார் இராணுவம் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்து அமைப்புகளுக்கும் முகப்புத்தகம் மற்றும் இன்ஸ்டாகிராம் ஆகிய சமூக ஊடகங்கள் தடை விதித்துள்ளன. இதுதொடர்பாக முகப்புத்தக நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'மியன்மாரில் ஆட்சிக் கவிழ்ப்புக்குப் பிந்தைய நிலைமையை நாங்கள் நெருக்கடி நிலையாகக் கருதுகிறோம்.



அதனையும் அதற்குப் பிறகு நடைபெற்று வரும் வன்முறைச் சம்பவங்களையும் கருத்தில் கொண்டு. இராணுவம் மற்றும் அதன் சார்பு அமைப்புகளுக்கு முகப்புத்தகத்தில் தடை விதிக்கப்படுகிறது.

இந்தத் தடை இன்ஸ்டாகிராம் சமூக ஊடகத்துக்கும் பொருந்தும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மியன்மாரில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் முறைகேடுகள் நடைபெற்றதாகக் கூறி. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தை இராணுவம் கடந்த 1ஆம் திகதி கவிழ்த்தது.

இதன்போது அரசாங்கத்தின் தலைமை ஆலோசகர் ஆங் சான் சூகி உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். அத்துடன் ஓராண்டுக்கு இராணுவ ஆட்சி தொடரும் எனவும் அதன்பின்னர் தேர்தல் நடைபெறும் எனவும் இராணுவம் அறிவித்தது.

ஆனால். இதற்கு ஐ.நா. மற்றும் அமெரிக்கா. பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

இது ஒருபுறமிருந்த மியன்மாரில் இராணுவ ஆட்சிக்கு எதிராகவும் ஆங்சான் சூகி உள்ளிட்ட தலைவர்களை உடனடியாக விடுவிக்க கோரியும் இராணுவம் விதித்துள்ள தடையை மீறி பொதுமக்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். தலைநகர் நேபிடா. யாங்கூன் மற்றும் மண்டலே நகரங்களில் தினந்தோறும் பல்லாயிரக்கணக்கான மக்கள் வீதியில் இறங்கி போராட்டம் நடத்துகிறார்கள். நடைபெற்று வரும் போராட்டத்தில். பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இதுவரை 5பேர் உயிரிழந்துள்ளனர்.





## விநோத மரங்கள்

**மனிதன் எவ்வளவு தான் விஞ்ஞானம் மூலம் விந்தைகள் பல புரிந்தாலும் இயற்கையின் விந்தைகளுக்கு நிகர் என்றால் அது இயற்கையே தான்.**







## மரங்களும் மருத்துவ பயன்களும்

**அத்திமரம்:** அத்தி இலை இரத்தத்தை சுத்தம் செய்யும். மரப்பட்டையைப் பொடி செய்து நல்லெண்ணெய் விட்டு அரைத்து பிளவை போன்ற நோய்களை குணமாக்கலாம். அத்தி மரப்பால் வாய்ப்புண்ணை குணமாக்கும். அத்தி விதையை பாலில் கலந்து சாப்பிட்டால் சிறுநீர் எரிச்சல் எலும்புருக்கி நோய் நீங்கும். பெண்கள் சாப்பிட்டால் கருவுண்டாகும்.

**ஆலமரம்:** ஆலும் வேலும் பல்லுக்குறுதி என்பது பழமொழி. விழுது பல்துலக்க உதவும் பட்டை நீரிழிவைப் போக்கும். ஆலம் விதை மலச்சிக்கலை நீக்கும்.

**கிளாமரம்:** கிளாப்பூவின் சாறு கண்ணின் சதைப்படலத்தை நீக்கும். காயை ஊறுகாயாக உண்ணலாம். உடல் வலை போகும். தூள் நஞ்சுத் தன்மையைப் போக்கும்.

**மகிஷமரம்:** மகிழம் பழம் உடல் நலத்துக்கு உகந்தது. விதையைப் பாலில் கலக்கி உண்டால் தாது விருத்தியுண்டாகும். உடல் அழகைக் காக்கும்.

**மாமரம்:** மாவிலை மங்களப் பொருள். நீரில் அதன் இலையைப் போடுவதால் நீர் தூய்மை பெறுகிறது. மாம்பிஞ்சானது வாந்தி மந்தம் போக்கும். முக்கனிகளில் ஒன்றான இது உயிர்ச்சத்து நிறைந்தது. மாங்கொட்டையின் பருப்பு சீத பேதியைப் போக்கும்.

**வன்னிமரம்:** வன்னி மர இலைச்சாற்றுடன் பசு நெய் வெண்ணெய் குங்குலியம் சேர்த்துண்ண மேக வெட்டை சொறி சிரங்கு நீங்கும். பட்டையைப் பொடித்து சாப்பிட கபம் போகும்.

**வில்வமரம்:** வில்வ தளிர் நீரிழிவைப் போக்கும் பூ மந்தம் நீக்கும். பிஞ்சு குன்மம் தீர்க்கும். வில்வாதி லேகியம் வாயுக்கோளாறு போக்கும். வில்வ இலையை ஊறவைத்த நீர் குளிர்ச்சி தரும்.

**வேம்பு:** வேம்பின் கொழுந்து வயிற்றுப் புழுக்களை அழிக்கும். இலைகள் அம்மை நோயைப் போக்கும். பழங்கள் நீரிழிவைக் கட்டுப்படுத்தும். வேப்பம்பூ குன்ம நோயைப் போக்கும். வேம்பின் பட்டை ஜுரம் போக்கும் துஷ்ட சக்திகளை விரட்டும் தன்மையுடையது.

இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 28.02.2021 அன்று வெளியிடப்பட்டது.